வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 26.09.2022 திங்கட்கிழமை | இதழ் : 281 | பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# அரசமைப்புக்கு உட்பட்டே கருத்து சுதந்திரத்துக்கு இடம்!

## ஐ. நாவில் வெளிவிவகார அமைச்சர்



**நியூயோர்க், செப்ரெம்பர் 26**

**ஒருவருக்கு கருத்து சுதந்திரம் அடிப்படை உரிமையாக உள்ளது. நிபந்தனையின்றி அதனை அங்கீகரிக்கிறோம். ஆனால், இந்த சுதந்திரம் அரசமைப்பு ஒழுங்குக்குள் இருக்க வேண்டும் - என்று ஐக்கிய நாடுகள் சபையில் கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.**

அத்துடன், அண்மைக்காலத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் நன்கு உணர்ந்து செயல்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 77ஆவது பொதுச் சபை அமர்வு நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், நேற்று அதிகாலை 2.30 மணியளவில் (இலங்கை நேரம்) வெளிவிவகார அமைச்சர் உரையாற்றினார்.

அவரின் நீண்ட உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

“கோவிட்-19 இன் மனித ஆரோக்கிய பாதிப்பைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையின் நாடு தழுவிய மூலோபாயம், அரசாங்கத்தின் முன் முயற்சி மற்றும் பாரபட்சமற்ற நட

15



## ஐ. நா. பிரதிநிதி இலங்கை வந்தார்!

கொழும்பு, செப். 26

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிரந்தர வதிவிட பிரதிநிதி சின்டி மெக்கெயின் தனது குழுவினருடன் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணிக்கு விமானம் மூலம் அவர் நாட்டை வந்தடைந்தார். 4 நாட்கள் இலங்கையில் தங்கும் அவர் இதன்போது பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன் இணைந்து மத்திய மாகாணத்துக்கு சென்று பாடசாலைகள் விவசாய ஆராய்ச்சி வசதிகள் மற்றும் சமூக அமைப்புகளை பார்வையிடுவார். அமெரிக்க அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட மனிதாபிமான உதவித் திட்டங்களையும் அவர் தொடங்கி வைப்பார். (ஐ)

## எரிபொருள் விலையை குறைக்கிறது ஐ. ஓ. சி!

கொழும்பு, செப். 26

எரிபொருள் விலையை குறைப்பதற்கு தயாராக இருப்பதாக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன், முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா,

“இதற்கான தீர்மானம் வலுசக்தி அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ள முடியும். சர்வதேச

15

## திலீபன் நினைவேந்தலில் முன்னணியினர் முரண்பாடு!

யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு அணிகளுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த தாக்குதலில் அந்தச் கட்சியை சேர்ந்த யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களான வ. பார்த்தீபன், தனுஜன் ஆகியோர் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார், மணி

15

## இன, மத பிரச்சனைகளுக்கு பேச்சு மூலம் விரைவில் தீர்வு!

■ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப். 26

“இலங்கை ஜனநாயக நாடு. இங்கு வாழும் சகல இனத்தவர்களுக்கும், அனைத்து மதத்தவர்களுக்கும் சம உரிமைகள் கிடைத்தே ஆக வேண்டும். எனவே, நாட்டில் இன, மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் சகல தரப்பினருடனும் சுமுகமாகப் பேசி விரைவில் தீர்வு காண்போம்.” - இவ்வாறு ஜனாதிபதி

15

## திலீபன் நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கிலும், புலம்பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளரான திலீபன் (இராசையா பார்த்தீபன்) இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி உணவு, நீரைத் தவிர்த்து போராட்டத்தை ஆரம்பித்தார். அவரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 1987 செப்ரெம்பர் 26ஆம் திகதி அவர் உயிர்தி

15

## இலங்கை உட்பட அயல்நாடுகளுக்கு விதிவிலக்காக இந்தியா உதவியது!

### ஐ. நா. வில் இந்திய வெளிவிவகார அமைச்சர்

நியூயோர்க், செப். 26

குறுகிய தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சர்வதேச சமூகம் உயர வேண்டும் என்று கூறும்போது, இந்தியா தனது பங்குக்கு இலங்கை உட்பட அயல் நாடுகளுக்கு உதவ விதிவிலக்கான நேரங்களில் - விதிவிலக்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எரிபொருள், அத்தியாவசிய பொருட்கள்

15



## தியாகி திலீபன் நினைவாக நேற்று உண்ணாவிரதம்!

யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலின் 11ஆவது நாளான நேற்று அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவேந்தல் நல்லூரில் அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபி அருகே நடைபெறுகிறது.

11ஆவது நினைவேந்தல் நாளான நேற்று திலீ

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

"அன்பார்ந்த தமிழீழ மக்களே

விளக்கு அணையும் முன்பு பிரகாசமாக எரியுமாம். அது போல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கின்றேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேசமுடிகிறது. போராடத் தயாராகுங்கள். எனக்கு விடைதாருங்கள். ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்க வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651ஆளாக மேலிருந்து பார்ப்பேன்.

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிர் கொடுப்பவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள் அவர்களையும் தடுக்காதீர்கள். மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவைகளும் ஒரே கருத்தைதான் கூறியுள்ளேன்"

முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், நல்லூர் வடக்கு வீதியில் அமைந்திருந்த உண்ணாவிரத பந்தலில் இருந்து ஆயிரக்கணக்காக மக்கள் கண்ணீர் விட்டபடி நிற்க- திலீபன் ஆற்றிய கடைசி உரை இது.

எண்பத்தியேழு செப்ரெம்பர் பதினைந்தாம் திகதி தனது போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், உணவை மட்டுமன்றி தண்ணீரையும் தவிர்த்து போராட்டக்களத்தில் இருந்தபோது ஒட்டுமொத்தத் தமிழரும் கண்ணீர் விட்டபடி அந்த பன்னிரண்டு நாட்களும் காலத்தைக் கடத்தினார்கள். செப்ரெம்பர் இருபத்தியாறு காலை திலீபனை பரிசோதித்த மருத்துவர் சிவகுமாரன் கைகளைக் கூப்பியவாறு அவர் மரணித்த செய்தியைச் சொன்னது இப்போதும் பசுமையான நினைவுகளாக இருக்கின்றது.

திலீபன் உண்ணாநோன்பிருந்த அதே காலப்பகுதியில் இவ்வாண்டும், இரண்டு வாகனப் பேரணிகள் நடந்தன. ஒன்று இன்றும் தொடர்கின்றது. அது அம்பாந்தோட்டை சென்ற பின்னரே முடிவடையும்.

பொத்துவிலில் திலீபனின் உருவப்படத்தை தாங்கியவாறு புறப்பட்ட ஒரு வாகனம் நல்லூரில் வந்து முடிவடைந்திருக்கின்றது. போன இடமெல்லாம் ஒவ்வொரு இடங்களிலிலும் தரித்து நின்றபோது ஒருசிலர் ஆங்காங்கே அவருக்கு அஞ்சலி செலுத்தியதையும் காண முடிந்தது. திலீபனின் தியாகத்தை அந்தப் பேரணி பெருமைப்படுத்தியதா என்பது தெரியவில்லை.

அதேகாலத்தில் காங்கேசன்துறையில் இன்னுமொரு வாகனம் பயணத்தைத் தொடங்கியது. அம்பாந்தோட்டையில் அதுமுடிவடையும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

திலீபன் போராட்டத்தை ஆரம்பித்தபோது முன்வைத்த ஐந்து கோரிக்கைகளில் ஒன்று, சிறைக் கூடங்களிலும் இராணுவ, பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது.

அப்போதும் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கோரிக்கை இன்றும் நம் மத்தியில் கோரிக்கையாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

அந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரியே ஒரு வாகன ஊர்வலம் அம்பாந்தோட்டை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. அது தொடங்கப்படும் போதும் இந்தப் பத்தியில் அதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இன்று சிங்கள மக்களும் அதே சட்டத்தால் பாதிக்கப்படத் தொடங்கியிருக்கின்றபோது, நாம் அதற்கு எதிராக தெற்கிலும் போராடத் தொடங்கியிருக்கின்றோம் என்று. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டாலும் தேசிய பாதுகாப்பு சட்டம் என்று புதிய சட்டத்தை கொண்டுவர அரசாங்கம் தயாராகி வருகின்றது. அது பயங்கரவாத தடைச் சட்டத்தை விட மோசமானதாக இருக்கும் என்றும் இப்போது எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது.

போராட்டம் என்பது சரியான நேரத்தில் சரியான கோரிக்கையை முன்வைத்து நடத்தப்பட வேண்டியது. திலீபனின் போராட்டம் போல. அதுமட்டுமல்ல, திலீபனைப் போல கடைசிவரை அதற்காக போராடவும் வேண்டும்.!

திலீபனின் நினைவுநாளில் சொல்லவேண்டும் போல இருக்கின்றது.!

- ஊர்க்குருவி

# போதைப் பொருள் பயன்படுத்தும் சாரதிகளை கண்டறிய விசேட கருவி!

கொழும்பு, செப். 26

போதைப் பொருள் பயன்படுத்தும் பேருந்து சாரதிகளை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பிரிவு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐஸ் போதை மாத்திரை மற்றும் ஏனைய போதைப் பொருட்களை பயன்படுத்தியவாறு பொதுப் போக்குவரத்து பேருந்து சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கைது செய்யப்படுவர் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

போதைப் பொருள் பயன்படுத்தும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை கண்டறிவதற்கு விசேட கருவியொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான சாரதிகள், நடத்துநர்கள் சட்ட வைத்திய அதிகாரியால் பரிசோதனைக்கு உட்படுத்தி அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான 27 பேர் அண்மையில் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, சில பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் நீண்ட நாட்களாக போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

பேருந்து சாரதிகள் மட்டுமன்றி தலைநகரைச் சேர்ந்த செல்வந்த இளைஞர், யுவதிகளும் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

பொலிஸாருக்கு பேருந்து சாரதிகள் மற்றும் பேருந்து நடத்துனர்கள் மட்டுமா கண்களுக்கு தெரிகின்றனர். வேறு எவரும் தென்படுவதில்லையா எனவும் கெமுனு விஜேரட்ன கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

## குடும்பமொன்றின் வரிச்சுமை 28,000 ரூபாயாக அதிகரிப்பு!

### பேராதனை பல்கலை ஆய்வில் தகவல்

கொழும்பு, செப். 26

குடும்பம் ஒன்றின்மீதான வரிச்சுமை 28 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42 வீதமாக உயர்ந்துள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகம் முன்னுடுத்த ஆய்வு ஒன்றிலேயே இந்த விடயம் தெரிய வந்ததாக அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்படி ஒரு சராசரி குடும்பத்தின் வரிச்சுமை சுமார் 28,000 ரூபாயாகும். அரசாங்கம் பெருமளவிலான மறைமுக வரிகளை மக்கள் மீது சுமத்துவதால் இந்த நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மண்மேடு சரிந்து ஒருவர் மரணம்!

கொழும்பு, செப். 26

மண்மேடு ஒன்று சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் கேகாலை பிசொவெல பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மேம்பால நிர்மாணப் பணியின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில், காயமடைந்த நபர் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 40 வயதுடைய, மஹவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். (ஐ)

## தேசிய பாதுகாப்பு என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பு!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, செப். 26

தேசிய பாதுகாப்பு என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பாகும். அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது. எனவேதான் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கலவரத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக பாராளுமன்றத்தைக் கைப்பற்றி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எவரேனும் முயற்சிப்பார்களாயின் அந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது."

- இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், "தேசிய பேரவை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சபாநாயகர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வார். பொதுஜன பெரமுனவானது மக்கள் மத்தியில் கீழ் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் சிறந்த அனுபவத்தைக் கொண்டுள்ள கட்சியாகும். - என்றார். (ஐ)

## தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, செப். 26

நாட்டின் தேயிலை ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

கடந்த 8 மாதங்களில் தேயிலை ஏற்றுமதியின் வருமானம் 825 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருமானம் குறைவடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் குறித்த காலப்பகுதியில், 882 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டன என்றும் அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## அரச உத்தியோகத்தருக்கான ஆடை; இன்று சுற்றறிக்கை வெளியாகும்!

கொழும்பு, செப். 26

அரசாங்க உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்கு வரும்போது பொருத்தமான ஆடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றறிக்கையை வெளியிட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை இந்த சுற்றறிக்கையை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்தார்.

பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போது சேலை அல்லது அலுவலகத்திற்கு பொருத்தமான ஆடையொன்றை அணியலாம் என்று ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும், சேலை உள்ளிட்ட ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளமையால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சிலர் சுற்றறிக்கையின் முதல் பகுதியை மாத்திரம் பின்பற்றுவதாகவும், பொருத்தமான அலுவலக ஆடை என்றால் என்ன என்பதை மறந்து விட்டதாகவும் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.09.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மாகாண சபைக்காக ஒரு சிங்கள குரல்?

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை முன்னெடுத்துச் செல்வது சட்ட விரோதமானது - மாகாண சபைகளை முன்கொண்டு செல்ல வேண்டுமாயின், புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருக்கின்றார். மாகாண சபைகளின் தேவையை வலியுறுத்த வேண்டிய கடப்பாடுள்ள - பொறுப்புள்ள - தமிழ் கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் சமூகமோ அமைதியாக இருக்கும்போது ஒரு சிங்களவர் அதிலும் குறிப்பாக அரசியல் நோக்கமில்லாத ஒருவர் மாகாண சபை தேர்தல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கின்றார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் இம்முறை கூட்டத் தொடரின் போதும், இந்தியா மாகாண சபை தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியிருக்கின்றது. இதேபோன்று மனித உரிமைகள் பேரவையின் முன்னைய பிரேரணைகளிலும் மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், தேவையுள்ள தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அதற்கான வலுவான ஆதரவுக் குரல்கள் எழவில்லை. மாறாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் கையெழுத்துக்கள் சேகரிக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. உண்மையில் மாகாண சபை தேர்தல்களை நடத்துங்கள் என்னும் கோஷத்துடன் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வெளித்தரப்புக்கள் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கூறும்போது, அதனை உண்மையிலேயே வற்புறுத்த வேண்டிய பொறுப்புள்ளவர்கள் அமைதியாக இருப்பதானது யாருக்கு சாதகமானது? மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று தமிழ் மக்கள் மத்தியிலிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்படாதபோது எதற்காக நீங்கள் பேசுகின்றீர்கள் என்று சிங்கள ஆட்சியாளர்கள் உலகத்தை நோக்கிக் கேட்க முடியுமல்லவா!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் நடவடிக்கைகளை நோக்கினால் ஒரு விடயம் தெளிவானது. அதாவது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை விடவும், தாங்கள் ஒவ்வொருவரும் தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுமென்னும் ஆசையுடன் மட்டுமே அலைகின்றனர். தங்களை நோக்கி சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஏதாவது ஒன்றை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர். இந்த பின்புலத்தில்தான், ஒருபுறம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கையெழுத்து ஆரவாரம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்னொரு புறமோ திலீபனை நினைகூருவதற்கான உரிமைக்காக தெருக்களில் சண்டையிடும் கட்சிகள். அடிப்படையில் இவைகள் அனைத்துமே தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இடம்பெறும் விடயங்கள் அல்ல. மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொள்ளும் ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதிகள் ஒருபோதும் இவ்வாறான நடவடிக்கைகளில் தங்களின் கவனத்தைக் குவிக்க மாட்டார்கள். கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்வது பற்றி மட்டுமே அவர்கள் சிந்திப்பார்கள்.

இதுவரையில், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் எவையுமே எந்தவொரு காத்திரமான விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. ‘எழுக தமிழ்’ தொடங்கி ‘பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை’யிலான ஆர்பாட்டங்கள் அனைத்துமே சில அரசியல்வாதிகளின் பிரபல்யத்திற்கும் புதிய அரசியல் கட்சிகளின் உருவாக்கங்களுக்கும் பயன்பட்டனவே தவிர, தமிழ் மக்கள் முகம்கொடுத்துவரும் சமகால பிரச்னைகளிலிருந்து அவர்களை விடுவிக்கவில்லை. தமிழ் அரசு கட்சியின் இளம் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கிழக்கில் முஸ்லிம்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கிறார் என்று கூறப்பட்டது. ஆனால், அந்த நல்லுறவைக் கொண்டு கல்முனை பிரதேச செயலகப் பிரச்னையை தீர்க்க முடிந்ததா? மக்களின் பிரச்னைகளை கையாள்வதற்கு பயன்படாத தொடர்புகள் மற்றும் நகர்வுகள் யாருக்காக முன்னெடுக்கப்படுகின்றன?

எனவே, தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தும் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு கோரும் பணியை முன்னெடுக்க வேண்டும். அதுதான் இன்று மக்களுக்கு தேவையான கோரிக்கை.

# சுமந்திரன் முன்னெடுக்கும் போராட்டம் போலியானது!

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள்

வவுனியா, செப். 26

*சுமந்திரனால் முன்னெடுக்கப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் ஒரு போலிப் போராட்டம் என வவுனியா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*நேற்று இவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினர்.*

*அத்துடன், எமது தொடர்ச்சியான போராட்டம் இன்று 2044ஆவது நாளை எட்டியுள்ளது. பயங்கரவாத தடுப்பு சட்டத்தை சிங்களவர்கள் ஒருபோதும் அகற்ற மாட்டார்கள். பயங்கரவாத தடுப்பு சட்டம் என்ற பெயரை தேசிய பாதுகாப்பு சட்டம் என்று மாற்றுவது பற்றி ஒரு பேச்சு உள்ளது. இது சர்வதேச சமூகங்களை, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவை ஏமாற்றும் செயல்பாடே.*

*சுமந்திரன் யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்திற்கு ஆதரவாக இருந்தமை ஒரு விசித்திரமான நடத்தையாகும். அவர் தனது கற்பனை தமிழ் எதிரிகளிடமிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு பயங்கரவாத தடுப்பு சட்டத்தைப் பயன்படுத்தினார். அவர் ஒரு சூழ்ச்சிப் பொய்யர் மற்றும் தமிழரை ஏமாற்றுபவர் என்பதை நாம் நிரூபிக்க முடியும்.*

*சர்வதேச விசாரணை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே முடிந்துவிட்டதாகக் கூறிய அவர், இப்போது சர்வதேச விசாரணைக்கு ஐ. சி. சி. அழைப்பு விடுக்கும் என்று கூறுவதன் மூலம் அவர் ஒரு பெரிய பொய்யர் என்பதைக் காட்டுகிறார்.*

*போருக்குப் பின்னர், நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட அரசாங்கத்தில் சுமந்திரன் பயங்கரவாத தடுப்பு சட்டத்தைப் பயன்படுத்தி 25 தமிழர்களைக் கைது செய்தார். 30 தொடக்கம் 40 வரையிலான சிங்கள விசேட அதிரடிப் படையினரை தமிழ் எதிரிகளிடமிருந்து தன்னை பாதுகாக்க சுமந்திரன் பயன்படுத்தினார் என்பது எல்லோருக்கும் தெரியும்.*

*அவர் எப்போதும் தமிழ் தேசியத்தை எதிர்க்கும் மக்களுக்கு உதவுகிறார். இதனால்தான் அவர் காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை கையொப்பங்களை சேகரிப்பதற்காக ஒரு பெரிய சுற்றுப்பயணத்தை மேற்கொள்கிறார். தனது அரசியலுக்காகவும், கொழும்பில் ஒரு தமிழனாக தனது பாதுகாப்பான வாழ்வுக்காகவும் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் அவர் திருப்திப்படுத்துகிறார்.*

*சிங்களக் கொடூரச் சட்டத்திலிருந்து எம்மை விடுவிப்பதற்கும் எமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கும் இன்னும் பல தேவைகளுக்கும் தமிழ் இறையாண்மை வேண்டும். தமிழர்களுக்கு உதவ முன்வாருங்கள் என்று ஒவ்வொரு தமிழனும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அழைக்க வேண்டும் - என்றனர். (ஐ)*

# நிலக்கரி கிடைக்காதுவிடின் மின்வெட்டு 10 மணிநேரமாகும்!

கொழும்பு, செப். 26

*நுரைச்சோலையில் உள்ள நிலக்கரி ஆலைக்குத் தேவையான நிலக்கரியை பெற்றுக்கொள்ள டொலர் கிடைக்காததால் நவம்பர் முதல் வாரத்தில் தினமும் பத்து மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.*


*நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான டொலரைப் பெற மத்திய வங்கியுடன் கலந்துரையாடிய போதிலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க கூறியுள்ளார்.*

*மேலும், ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட 21 நிலக்கரி கப்பல்கள் உடனடியாக வரவில்லை என்றால் மின்வெட்டு தவிர்க்க முடியாதது என்றும் அவர் கூறினார்.*

*இதேவேளை நிலக்கரி கிடைக்காவிட்டால் பத்து மணித்தியாலங்களுக்கு மேல் மின்சாரத்தை துண்டிக்க வேண்டியது கட்டாயம் ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் கூறுகிறார்.*

*நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் நாட்டில் 40 வீதமான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்து வருவதாலும் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை வரட்சியான காலநிலை நிலவுவதாலும், மின்சார விநியோகத்தில் தீவிரமான நிலைமை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**



பித்ரு வழிபாட்டை மேற்கொள்வீர்கள். சிலர் ஆலய வழிபாடு செய்வர். செயலில் உற்சாகம் இருக்கும். உறவினர்கள் இல்லம் தேடி வருவார்கள். பொருளாதார உயர்வுக்காக மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும்.

**இடபம்**



நெருக்கடியைச் சந்திப்பீர்கள். அதன்பின் உங்கள் விருப்பம் நிறைவேறும். உறவினர் ஆதரவுடன் தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**



புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயல் வெற்றியாகும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். உங்கள் ஆற்றல் வெளிப்படும். நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி நிறைவேறும்.

**கடகம்**



குடும்பத்தினர் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். உங்கள் முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.குழப்பம் விலகும். லாபம் கூடும்.

**சிம்மம்**



செயல்கள் இழுபறியாக இருக்கும். அதன்பின் நடக்கும். உங்களின் நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.பெரியவர்களின் வழிகாட்டுதல் லாபம் தரும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**



நெருக்கடி உண்டாகும். மதியத்திற்கு மேல் பணம் வரும். நண்பர்கள் ஒத்து ழைப்புடன் புதிய செயலில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.நீங்கள் எதிர்பார்த்த தகவல் வரும். செலவுகள் கட்டுப்படும்.

**துலாம்**



செயல் இழுபறியாகும். மதியத்திற்கு மேல் எதிர்பாராத செலவை சந்திப்பீர்கள். நிதானமாக செயல்படுங்கள். மதியம் வரை மகிழ்ச்சியாகவே செல்லும் அதன்பின் சிரமம் ஏற்படும்.

**விருட்சிகம்**



சுறுசுறுப்பு கூடும். பொருளாதார நெருக்கடியை சமாளித்து லாபம் காண்பீர்கள்.எதிர்பார்த்த பணம் தேடி வரும். புதிய முயற்சி அனுகூலம் தரும். குடும்பத்தில் பிரச்னை தீரும். எதிர்பாராத வரவால் மனம் மகிழ்வீர்கள்.

**தனுசு**



எதிர்காலம் கருதி மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். ஆலய வழிபாடு செய்வீர்கள்.சேமிப்பில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர்.வேலைப்பளு அதிகரிக்கும்

**மகரம்**



நெருக்கடி விலகும். முயற்சித்தும் நிறைவேறாமல் இருந்த செயல்கள் மதியத்திற்கு மேல் நிறைவேறும். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும். மதியத்திற்கு மேல் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்**



காலையில் இருக்கும் உற்சாகம் மதியத்திற்கு மேல் இருக்காது. பிரச்னை உருவாகலாம். நினைத்ததை அடைந்து வந்த நிலையில் மதியத்திற்கு மேல் சங்கடம் ஏற்படலாம்.

**மீனம்**



விருப்பம் இன்று நிறைவேறும். நட்பு வழியே நன்மைகள் அதிகரிக்கும். உறவினர் உதவியால் லாபம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள்.

# மொழியால் இணைந்தவர்களை சாதி, மதத்தால் பிரிக்கமுடியாது!

## முதலமைச்சர் ஸ்டாலின்

*சென்னை, செப். 26*

மொழியால் இணைந்தவர்களை சாதி, மதத்தால் பிரிக்க முடியாது. எனவே, நாம் அனைவரும் தமிழால் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

செம்மொழியான தமிழை உலகம் முழுவதும் வளர்க்கும் நோக்கத்தில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சார்பில் தமிழ் பரப்புரைக் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் விவேகானந்தர் அரங்கில் நடைபெற்றது

இதில் பங்கேற்று பேசிய முதலமைச்சர் ஸ்டாலின்,

தமிழ் என்பது வெறும் மொழியல்ல. அது நம் உயிருக்கு நிகரானது. அத்தகைய தமிழை உலகமெல்லாம் கொண்டு சேர்க்கக்கூடிய தமிழ் பரப்புரைக் கழகத்தை தொடங்கி வைப்பதை பெருமையாகக் கருதுகிறேன். தமிழின் சொத்துகள் பல நூறுஆண்டுகளாக சேகரித்து வைக்கப்படாமல் அழிந்து போய்விட்டது. அந்த தவறு தடுக்கப்பட்டு நமது அறிவுச் சொத்துகள் அனைத்தையும் முழுமையாக டிஜிற்றல் வடிவில் மாற்றிச் சேமித்து வைக்கும் பணியை தமிழ் இணைய கல்விக் கழகம் செய்து வருகிறது.

தமிழர்கள் 30இற்கும் மேலான நாடுகளில் அதிகமாகவும், 60இற்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்கின்றனர். அவர்களுக்கு தமிழை சொல்லித் தரவே இந்த பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ் 24 மொழிகளில் பாடநூல் களாகவும், 12 மொழிகளில் ஒலிப் புத்தகமாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழர்கள் அனைவரும் தமிழில் எழுத, பேச, படிக்க, சிந்திக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

மொழிக்கு மட்டும்தான் மனிதர்களை அன்பால் இணைக்கும் ஆற்றல் உள்ளது. மொழியால் இணைந்தவர்களை சாதியால், மதத்தால் பிரிக்க முடியாது. எனவே, எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும் தமிழை தள்ளி வைத்து விடக்கூடாது.

தமிழ் பரப்புரைக் கழகத்தின் மூலம் 22 நாடுகள் மற்றும் 20 மாநிலங்களை சேர்ந்த 25 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதை உலகம் முழுவதும் வாழும் பல்லாயிரக் கணக்கான அயலகத் தமிழ் மாணவர்களுக்குக் கொண்டு செல்லும் பணியை தமிழக அரசு மேற்கொள்ளும் - என்றார். (ஐ)

# உலக தமிழாராய்ச்சி மாநாடு; அடுத்த ஆண்டு சிங்கப்பூரில்!

*சென்னை, செப். 26*

உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு, அடுத்த ஆண்டு ஜூன் 16 முதல் 18 வரை, சிங்கப்பூரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக தமிழ் ஆய்வு மன்றம் தொடங்கப்பட்ட 1964ஆம் ஆண்டு முதல், இதுவரையில் 10 உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடந்துள்ளன. 11ஆவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு, சிங்கப்பூரில், 2023ஆம் ஆண்டு ஜூன் 16 முதல் 18ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்த மாநாட்டுக்கான சின்னத்தை, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவரும், முன்னாள் துணை வேந்தருமான முனைவர் பொன்னவைகோ, சென்னையில் நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

இதன்போது, புதிய வரலாற்றியல் கண்ணோட்டத்தில், செவ்விலக்கியங்களை ஆராய்ந்து, அண்மைக்கால அகழாய்வுகளோடு, அறிவியல் சான்றுகளை முன்வைத்து, தமிழர், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தலே, இந்த 11ஆவது மாநாட்டின் அடிப்படை நோக்கம். இந்த மாநாட்டில் பங்கேற்க, முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்க உள்ளோம் - என்றார். (ஐ)

# மதக் கலவரங்களை ஏற்படுத்த திட்டமிட்ட சதி நடவடிக்கைகள்

## நாம் தமிழர் கட்சி சாடல்

*சென்னை, செப். 26*

"வருகிற பாராளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு பெரும் மதக்கலவரத்தை தமிழகத்தில் ஏற்படுத்தத் திட்டமிட்டு வரும் இந்துத்துவக் கும்பலின் சதிச் செயல்களுக்கு இரையாகாது, தமிழக அரசாங்கம் விழிப்போடு செயல்பட்டு சமூக அமைதியையும், மத நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகப் பொறுப்பும்,கடமையுமாகும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நாடெங்கிலும் மதப்பூசல்கள் ஏற்பட்ட போதுகூட அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகத்தில் மதக் கலவரங்களை ஏற்படுத்துவதற்கென இந்துத்துவ இயக்கங்கள் செய்யும் பிரித்தாளும் சூழ்ச்சிகள் பெரும் அதிர்ச்சியைத் தருகின்றன. ஒருபுறம், இஸ்லாமிய இயக்கங்களைக் குறிவைத்து, தேசியப் புலனாய்வு முகாமையும், அமுலாக்கத்துறையும் விசாரணை, கைது என அதிகாரப் பலத்தின் மூலம் வேட்டையாடிக் கொண்டிருக்க, மறுபுறம், மாநிலம் முழுமைக்கும் 50 இடங்களில் ஊர்வலம் நடத்துவதற்கு ஆர். எஸ். எஸ். இயக்கம் தயாராகிக் கொண்டிருப்பது திட்டமிடப்பட்டச் சதியின் செயல்பாட்டு வடிவமேயாகும்.

தி. மு. க. அரசாங்கம், உயர் நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை வைக்காதுவிட்டதன் விளைவாகவே, ஆர். எஸ். எஸ்ஸின் பேரணிக்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது என்பது உறுதியாகியிருக்கும் நிலையில், மதவாதத்தை எதிர்ப்பதாகப் பேச்சளவில் மட்டும் கூறிக்கொண்டு, ஆட்சி நிர்வாகம், சட்டப்போராட்டமென செயல்பாட்டளவில் பா. ஜ. கவோடு இணங்கிப்போகும் தி. மு. க. அரசின் பாதகச்செயல் பச்சை சந்தர்ப்பவாதமாகும்.

தென் மாநிலங்களே தங்களது இலக்கென பா. ஜ. கவின் தலைவர் பெருமக்கள் கூறி வரும் நிலையில், அதற்கு அடித்தளமிடும் வகையில் தமிழகத்தில் மதமோதல்களையும், கும்பல் வன்முறைகளையும் ஏற்படுத்த இந்துத்துவ இயக்கங்கள் முயற்சிக்கிறதோ? தாங்களே தங்களது வீடுகளில் பெற்றோல் குண்டை வீசி, தங்கள் வாகனத்தை எரித்து அரசியல் இலாப மீட்ட முயன்ற பா. ஜ. கவின் நிர்வாகிகளது முந்தைய செயல்பாடுகள் யாவும் சமகால சான்றுகளாக இருக்க, அதன் தொடர்ச்சியாக இதுவும் இருக்கலாம் எனும் வாதத்தில் உண்மையில்லாமல் இல்லை. - என்றுள்ளது. (ஐ)

# பரீட்சைக்கு சென்ற மாணவியை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 26

பரீட்சைக்காக சென்ற வட்டுக்கோட்டையை சேர்ந்த 17 வயது சிறுமியை காண வில்லை என்று வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டு. தெற்கு கொட்டிசுட்டி பகுதியைச் சேர்ந்த மதிவதனன் லக்சாயினி வயது 17 எனும் சிறுமி நாடகமும் அரங்கியலும் செயன்முறை பரீட்சைக்காக பாடசாலை சென்ற நிலையில் கடந்த புதன்கிழமையிலிருந்து வீடு திரும்பவில்லை என தெரிவித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வட்டு பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)



# சிறுதானிய விதைகள் இரட்டிப்பாக கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

சிறு தானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தில் விதைகளைப் பெற்ற விவசாயிகள் அறுவடையின் பின்னர் விதைகளைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் மீள வழங்கும் மாண்புறு உழவர் நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை நவக்கிரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் போது விதைகளை மீளக் கையளித்த விவசாயிகள் "மாண்புறு உழவர்" சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் மக்களின் பண்டைய உணவுப் பண்பாட்டில் பிரதான இடத்தைப் பெற்றிருந்த சிறுதானியங்கள் தற்போது வழக்கொழிந்து வருகின்றன. நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றாக்குறைவைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சிறுதானியங்களை மீள முடி சூட்டுவோம் என்ற கருப்பொருளில் இராச தானியத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இராச தானியத் திட்டத்தில் விதைகளைப் பெறும் விவசாயிகள் அறுவடையின் பின்னர் பெற்றுக்கொண்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் மீளக் கையளிக்க வேண்டும் என்ற உடன்பாட்டுடன் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களில் அறுவடையை முடித்த ஒரு தொகுதி விவசாயிகளே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனிடம் விதைகளைக் கையளித்தனர். (ஐ)

# 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகள் கடத்தல் முறியடிப்பு!

தென்மராட்சி, செப். 26

சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

டிப்பர் வாகனத்தில் மரக்குற்றிகளை ஏற்றி அதன் மேல் கற்களை பரவி மரக்குற்றிகளை எடுத்து சென்றபோதே சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது மரக்குற்றிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ)





# தியாகி திலீபன் நினைவேந்தல் நேற்று எழுச்சியாக அனுஷ்டிப்பு!

- அடையாள உண்ணாவிரத போராட்டம்
- சிறப்பு இரத்த தான முகாமும் நடந்தது!

யாழ்ப்பாணம், செப். 26

**ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு ஆண்டின் 11ஆம் நாள் நினைவேந்தல், நேற்று நல்நலூரில் அவரின் நினைவுத் தூபியில் நடைபெற்றது.**

நினைவேந்தல் எட்டு மணியளவில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் ஞாபகார்த்தமாக அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. அத்துடன், சிறப்பு இரத்த தான முகாம், சித்திரப்போட்டி என்பனவும் நடைபெற்றன.



தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறை பொறுப்பாளரான திலீபன் (இராசையா பார்த்தீபன்), வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் உணவு, நீரைத் தவிர்த்து போராடினார். அவரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அவர் தனது உயிரைத் தியாகம் செய்தார். (ஐ)





# யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தியாகி திலீபன் நினைவு ஊர்தி!

யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று ஊர்தி பவனியொன்று ஆரம்பித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து நேற்று முற்பகல் 11மணியளவில் குறித்த ஊர்திப்பவனி ஆரம்பித்தது.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு பலரும் அஞ்சலி செலுத்தினர். இந்த ஊர்திப் பவனியானது யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணித்து வருகிறது. (ஐ-3)

## போதை அடிமைகளுக்கு சிகிக்சை; வடக்கு, கிழக்கில் மையம் தேவை!

யாழ்ப்பாணம், செப். 26

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்காக சிகிச்சை மையங்கள் வடக்கு -கிழக்கில் இல்லை. இந்தக் குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும். - இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்ற போதைப் பொருளுக்கு எதிரான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அஜந்தன் சியாமினி இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

போதைப்பொருளுக்கு அடிமையாகிய 21 வயதுக்கு உட்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு கண்டியிலும், 21 தொடக்கம் 32 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு கம்பஹாவிலும், 32 வயதுக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு காலியிலும் சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் உள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் போதைப் பொருளுக்கு எதிரான சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்பட வேண்டும். - என்றார். (ஐ)

## கிளிநொச்சி மருத்துவமனையில் 46 வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கிளிநொச்சி, செப். 26

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 46 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. இதனால் நோயாளர்கள் பலர் தமக்கான மருந்துகளை வெளியிடங்களில் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கும் இதே போன்று முல்லைதீவு மாவட்டத்தின் ஒரு பகுதி மக்களுக்கும் சிகிச்சை வழங்கும் பிர தான வைத்திய சாலையாக கிளிநொச்சி மாவட்ட மருத்து வமனையே உள்ளது. இந்நிலையில், இங்கு பல்வேறு மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

குறிப்பாக, சிறுவர்களுக்கான பாணி மருந்துகள் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கான குறிப்பிட்ட சில மருந்துகள் இல்லாத நிலை உள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருந்து தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கொடையாளர்களின் உதவியுடன் சில மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## உணவுப் பாதுகாப்பு தொடர்பில் வடமராட்சி வடக்கில் கூட்டம்!

வடமராட்சி, செப். 26

உணவு பாதுகாப்பு தொடர்பான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேசத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களான பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ. சா. அரியகுமார், பருத்தித்துறை நகர சபை தவிசாளர் இருதயராசா, மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பொது அமைப்பு பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அத்துடன், வீட்டுத் தோட்டங்களை ஊக்குவித்தல், உட்பட போசாக்கை மேம்படுத்தும் பல திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. (ஐ-2)

## போதைப் பொருளுக்கு அடிமையாகி வாரம் 30 மாணவர்கள் சிகிச்சையில்!

### யாழ்ப்பாணத்தில் இந்த அவல நிலை

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒவ்வொரு வாரமும் சராசரியாக 30 மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், சாவகச்சேரியில் இடம்பெறுகின்ற உளவள நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையானவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அஜந்தன் சியா மினி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாடசாலை மட்டங்களிலிருந்தே போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் போதைக்கு எதிரான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அந்தவகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இரண்டு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்து தற்பொழுது பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

கிராம மட்டங்கள் ரீதியாகவும் பாடசாலைகளை மையப்படுத்தியதாகவே இந்தச் செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தவகையில், தென்மராட்சி கல்வி வலயத்தில் 53 அதிபர்கள் மற்றும் 57 உளவளத் துணை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயல்திட்டத்தை அடுத்து, பல அதிபர்கள், ஆசிரியர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் மாணவர்களை சிகிச்சைக்காக ஒப்படைத்து வருகின்றார்கள். - என்றார். (ஐ)

## சத்துணவு வழங்கலை நிறுத்தாதீர்கள் விசுவமடுவில் கவனவீர்ப்பு போராட்டம்!

முல்லைத்தீவு, செப். 26

சத்துணவு வழங்கலை நிறுத்த வேண்டாம் எனக் கோரி விசுவமடுவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சி விசுவமடு பகுதியில் தென்னிந்திய திருச்சபையால் சத்துணவு மற்றும் மாலை நேர கல்வி உள்ளிட்ட சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இந்நிலையில், இந்தப் பணிக்கான புதிய ஊழியராக வண. பிதா ஜோன் தேவசகாயம் கடந்த 18ஆம் திகதி தென்னிந்திய திருச்சபை பேராயத்தால் நியமிக்கப்பட்டார். எனினும், ஏற்கனவே பணியில் இருந்த வண. எஸ்தர் மடுராணி பொன்ராசா, குறித்த பணித்தளத்தில் இருந்து வெளியேற மறுத்துள்ளதாகவும், அதானால் குறித்த திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல முடியாதுள்ளதாகவும் திருச்சபை கவலை தெரிவித்துள்ளது.

பணியில் இருந்த வண. எஸ்தர் மடுராணி பொன்ராசாவின் வழிநடத்தலில் முன்னெடுக்கப்பட்ட பணியின்போது, பெருந்தொகை பணம் காசோலை ஊடாக மாற்றப்பட்டு, சிறு சிறு செலவுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து செலவுகளுக்கும் காசோலையை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டபோதிலும், அத்தகைய நடைமுறை பின்பற்றப்படவில்லை.

மேலும் குறித்த ஊழியத்துக்கான சேவைக்காலம் நிறைவடைந்து இடமாற்றம் அறிவிக்கப்பட்ட நிலையில், இடமாற்றத்தை மறுத்துள்ளார்.

இந்த நிலையில் புதிதாக பொறுப்புக்களை ஏற்ற ஊழியரிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கணக்காய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனால், இந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து மிக விரைவில் இந்தப் பணி முன்னெடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட குரு முதல்வர் வணபிதா கோணேஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

## 25 பவுண், 4 இலட்சம் ரூபாய் திருவையாற்றில் கொள்ளை!

### நேற்று அதிகாலைவேளை சம்பவம்

கிளிநொச்சி, செப். 26

நேற்று அதிகாலை வேளை வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் 25 பவுண் நகைகள், 4 இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி - திருவையாறு 2ஆம் பகுதியில் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று அதிகாலை அவரின் வீட்டுக்கு சென்றவர்கள், வீட்டிலிருந்த மூவரின் பெயர்களைக் கூறி அழைத்துள்ளனர். இதனையடுத்து வீட்டில் இருந்த முதியவர் சென்று கேற்றை திறந்தபோது அவரைத் தாக்கி வீட்டினுள்ளே இழுத்துச் சென்றார்கள்.

தொடர்ந்து வீட்டிலிருந்த மனைவியையும் தாக்கிய கொள்ளையளர்கள் இருவரையும் கட்டிப்போட்டுவிட்டு பணம் நகை எங்கே உள்ளது என்று கேட்டுள்ளனர்.

இதன்போது வீட்டிலிருந்த பெண் தான் அணிந்திருந்த நகைகளை கழற்றிக் கொடுத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து தாலிக்கொடி எங்கே என்று கேட்டு இருவரையும் தாக்கியுள்ளனர்.

தாலிக்கொடி இல்லை எனத் தெரிவித்தபோது “பகல் கலயாணவீட்டுக்கு சென்று வரும்போது போட்டிருந்தாய்... எங்கே”, எனக் கேட்டு அந்தப் பெண்ணைத் தாக்கியுள்ளனர்.

இதன் பின்பு வீடு முழுவதும் தேடுதல் நடத்தியவர்கள் தாலிக்கொடி உள்ளிட்ட ஏனைய நங்க நகைகள் மற்றும் பணம் 4 இலட்சம் ரூபாயையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றனர். அத்துடன், அவர்களிடமிருந்த கைபேசியையும் பறித்தவர்கள் வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளையும் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர் என்று அறிய வருகின்றது.

கொள்ளையரின் தாக்குதலில் காயமடைந்த வீட்டு உரிமையாளர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# ஒரு மணி நேரத்துக்கு 32 பேர் நாட்டைவிட்டு செல்கின்றனர்!

## கருஜெயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

ஒரு மணி நேரத்துக்கு 32 பேர் நாட்டைவிட்டு வெளிநாடு செல்கின்றனர் என தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய, நாடு துரிதமாக வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது என்பதற்கான அறிகுறி இது எனவும் தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் கடந்த 8 மாதங்களில் 500 மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

பொறியியலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். கடுமையான ஏமாற்றத்தையும் விரக்தியையும் எதிர்கொண்டுள்ள இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காவது சிறந்த கல்வியை வழங்கலாம் என்ற எதிர்பார்ப்பில் நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விக்கான அவசியமான வளங்கள் இலங்கையில் இல்லாததன் காரணமாக பெற்றோர் தங்கள் சொத்துக்களை விற்றுவிட்டு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு நிர்ப்பந்திக்க பட்டுள்ளனர்.

நாங்கள் எங்கள் எதிர்கால இயற்கை வளங்களை இழக்கின்றோம். இலங்கையிலிருந்து வெளியேறும் அனைத்து தனிநபர்களும் இலங்கையின் இலவச கல்வி மூலம் உருவாக்கப்பட்டவர்கள். இது நாடு துரிதமாக வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அறிகுறி. இந்த விடயங்கள் குறித்து அனைத்து பொதுமக்களும் ஆழமான புரிந்துணர்வை கொண்டிருக்கவேண்டும்.

இந்த நிமிடம் வரை நாட்டை மீள கட்டியெழுப்ப முடியும் என்றே நம்பிக்கை கொண்டுள்ளோம். இதற்கு தேசிய ஐக்கியமும் கருத்தொருமைப்பாடும் மிகவும் அவசியம் இது பாராளுமன்றத்தின் ஊடாக உருவாகவேண்டும். கருத்தொருமைப்பாடு பொதுமக்கள் ஊடாக உருவாக வேண்டும்.

2020 இல் நிறைவேற்றப்பட்ட 20ஆவது திருத்தமே நாட்டில் ஜனநாயகம் முற்றாக அழிவடைவதற்கு காரணம் என தெரிவித்துள்ள கருஜெயசூரிய 20ஆவது திருத்தம் குறித்து எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் மக்களின் கருத்துக்களை அறிய முயலவில்லை.

20ஆவது திருத்தம் மூலமே நாடு அழிக்கப்பட்டது அந்த திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட தருணம் முதல் நாங்கள் நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தினர் அதனை எதிர்த்தோம் அதில் உள்ளடங்கியுள்ள பல ஆபத்துக்களை அடையாளம் கண்டு தெரிவித்தோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சகல மாகாண சபைகளும் தற்போது சட்டவிரோதமாகவே இயங்குகின்றன

## தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்!

கொழும்ப, செப். 26

**நாட்டில் பொதுமக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை முன்னெடுத்து செல்வது முழுவதும் சட்டவிரோத செயலாகும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவோர் அரச நிறுவனத்தையும் மக்கள் பிரதிநிதி ஒருவர் இல்லாமல் கொண்டு செல்வது குற்றமாகும். உள்ளூராட்சி மன்றங்கள், தேர்தல் இன்றி ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களால் செயல்படுத்தப்படுவது, பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறலாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த காலங்களில் தேர்தல் நடத்தப்படவில்லை என மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவை தூற்றினர். எனினும், நீதிமன்றுக்கு சென்றதும், பாராளுமன்றத்தால் இந்த செயல்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

பழைய முறையில் அல்லது புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாண சபை முறைமையை கொண்டு செல்ல வேண்டுமாயின் மாகாண சபை உறுப்பி னர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் - என்றும் மகிந்த கூறினார். (ஐ)

# நீதிமன்றத்தை அவமதித்தார் பொலிஸ் மா அதிபர் சந்தன!

## உயர்நீதிமன்றம் நால்வருக்கு அறிவித்தல்

கொழும்பு, செப். 26

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன மற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உயர் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உப காவல்துறை பரிசோதகர் சுகத் மெண்டிஸின் வேதனத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை பின்பற்றத் தவறியமையே இதற்குக் காரணம்.

பிரியந்த ஜயவர்த்தன, எஸ். துரைராஜா மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி பொலிஸ் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, பிரதி பொலிஸ் மா அதிபர் ஜே.எஸ்.வீரசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். என்.எஸ்.மெண்டிஸ் மற்றும் ஏ.எஸ்.பி சனத் குமார ஆகியோரை எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உப காவல் துறை பரிசோதகர் சுகத் மெண்டிஸுக்கு வேதனம் வழங்க வேண்டும் என்று கடந்த மே 18ஆம் திகதியன்று, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வர்த்தகர் ஒருவரின் கொலை தொடர்பில், மகன் மற்றும் நான்கு பேருடன் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ் அதிபர் வாஸ் குணவர்த்தனவை கைது செய்வதற்கு காரணத்தை காட்டும் வகையில், தமது உயர் அதிகாரியான ஷானி அபேசேகரவுடன் சில இடங்களில் ஆயுதங்களை வைத்தார் என்ற குற்றச்சாட்டில் அதிகாரி மெண்டிஸ் கைது செய்யப்பட்டு 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

எனினும் மெண்டிஸுக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளில் பல முரண்பாடான நிலைப்பாடுகளைக் குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஷானி அபேசேகரவுடன் அவருக்கும் பிணை வழங்கியது.

இந்தநிலையில் இடை நிறுத்தப்பட்ட தமது வேதனத்தை தருமாறு கோரி மெண்டிஸ் உயர்நீதிமன்றில் மனுவை தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்தே அவரின் வேதனத்தை வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (ஐ)

# ஹெரோயின் வாங்குவதற்காக பாலியலில் ஈடுபட்ட சிறுமி மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 26

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஹெரோயினுக்கு அடிமையான 17 வயதுச் சிறுமியொருவர் நேற்று மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டார்.

அவர் 8 மாதங்கள் கர்ப்பமாகவுள்ளார் என்றும் மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹெரோயினைப் பெறுவதற்காக பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டதாலேயே கர்ப்பம் தரித்தார் என்று மறுவாழ்வு நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சிறுமியின் தாயார் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அந்தச் சிறுமி மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிய வந்தது. (ஐ)

# எல்லை வனத்துக்கு தீ; 16 மாணவர்கள் கைது

கொழும்பு, செப். 26

எல்லை பாதுகாப்பு வனப் பகுதிக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் பாடசாலை மாணவர்கள் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வைத்த தீயால் எல்லை வனப்பகுதியில் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளை, ஹாலிஎல மற்றும் நமுனுகுல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எல்லை வனப்பகுதியை பார்வையிட வரும் சிலர் குறித்த பிரதேசத்தை அழித்து வருவதாக பிரதேச சபையின் தலைவர் மாலக பிரபாத் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நாகர்கோவிலில் கசிப்பு உற்பத்தி செய்தவர் கைது!

வடமராட்சி, செப். 26

நாகர்கோவிலில் கசிப்பு காய்ச்சிய நபர் ஒருவர் பொலிஸாரால் குது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 30 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கையிலேயே இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரிடம் சிக்கியவர் நீண்டகாலமாக பருத்தித்துறை பொலிஸாருக்கு 'டிமிக்கி' விட்டு தப்பித்திருந்தார் என்றும் இந்நிலையில், நேற்று கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது சிக்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்ட கசிப்பு உற்பத்தி பொருட்களையும் பருத்தித்துறை பொலிஸார் ஊடாக இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# சட்டவிரோதமாக இந்தியாவுக்கு செல்ல முயன்ற ஐவருக்கு மறியல்!

மன்னார், செப். 26

மன்னார் தாழ்வுபாடு கடல் பகுதி ஊடாக இந்தியாவிற்கு செல்ல முயன்ற நிலையில் கைது செய்யப்பட்ட 12 நபர்களில் 5 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட, ஏனைய 7 சிறுவர்களையும் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்பினூடாக சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற சிறுவர்கள் உட்பட 12 பேர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 18 வயதுக்கு மேற்பட்ட 2 ஆண்களும் 03 பெண்களும் அடங்குகின்றனர். 7 பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் - வெடித்தலத்தீவு பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



# தலைவர் தேர்தல் ஒருபக்கம் நடை பயணம் மறுபக்கம்

- சுரேந்தர் ரவி

அகில இந்திய தேசிய காங்கிரஸின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் நடவடிக்கைகள் ஒருபக்கம் தீவிரமடைந்துள்ளன. கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தியும், அவரின் மகனும் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தியும் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை.

நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை வகிக்க உள்ளதே தேர்தல் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது. ஆனால், பெரும்பாலானவர்கள் எதிர்பார்ப்பதுபோல தேர்தல் சுமுகமாக இருக்கப் போவதில்லை என்றே அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கட்சியின் மூத்த தலைவர்கள் அசோக் கெலாட், சசி தரூர் ஆகியோர் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் விவகாரங்கள் ஒருபக்கம் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்க, கட்சியை வலுப்படுத்தவும் பாஜகவுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டவும் 'பாரத் ஜோடோ' நடைப்பயணத்தை ராகுல் காந்தி மும்முரமாக நடத்திக் கொண்டிருக்கிறார். தலைவர் தேர்தல் விவகாரங்களில் அவர் தலையிடுவதாகத் தெரியவில்லை.

### சோனியாவின் நிலைப்பாடு

நாடாளுமன்றத் தேர்தல், மாநில பேரவைத் தேர்தல்களில் தொடர் தோல்விகளைக் கண்ட காங்கிரஸில் அமைப்பு சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என 23 மூத்த தலைவர்கள் வலியுறுத்தினர். அதையடுத்து, கடந்த மே மாதம் நடைபெற்ற உதய்பூர் காங்கிரஸ் மாநாட்டில் கட்சித் தலைமையை நேரு குடும்பத்தைச் சாராதவரிடம் வழங்கத் தயாராக உள்ளதாக சோனியா காந்தி அறிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடங்கிய போது, ராஜஸ்தான் முதல்வரும் கட்சியின் மூத்த தலைவருமான அசோக் கெலாட்டிடம் கட்சியை வழிநடத்த வேண்டுமென சோனியா காந்தி வலியுறுத்தினார். இது தலைவர் தேர்தலின் நடுநிலைத்தன்மை குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இந்நிலையில், தேர்தலில் நடுநிலைத்தன்மை உறுதி செய்யப்படும் என்று மூத்த தலைவர் சசி தரூரிடம் சோனியா உறுதியளித்துள்ளார்.

### ராகுலின் நிலைப்பாடு

2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று கட்சித் தலைவர் பதவியை ராஜிநாமா செய்த ராகுல் காந்தி, அப்பொறுப்பை மீண்டும் ஏற்க மறுத்து வருகிறார். அண்மையில் கட்சியில் இருந்து விலகிய குலாம் நபி ஆசாத், ராகுல் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார். கட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவும் ராகுல் எவ்வித கருத்துகளையும் தெரிவிக்கவில்லை.

தேர்தல் நடைபெற்று புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவரது தலைமையிலான கட்சியின் செயல்பாட்டில் ராகுலின் பங்களிப்பு என்னவாக இருக்கும் என்பது தொடர்பாக கட்சி சார்பில் எந்தவித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

### தேர்தல் போட்டி

கட்சித் தலைவர் தேர்தலுக்கான போட்டியில் ஆரம்பத்தில் இருந்தே முன்னணியில் இருப்பவர் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட். தனிப்பட்ட முறையில் ராகுல் காந்தியே கட்சித் தலைவர் பொறுப்பை மீண்டும் ஏற்க வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தாலும், ராகுல் அதை ஏற்காதபட்சத்தில் மூத்த தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அசோக் கெலாட் தேர்தலில் போட்டியிடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நவராத்திரி விழா வரும் 26-ஆம் திகதி தொடங்கவுள்ளது. அதற்குப் பிறகு அவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்வார் என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இளைஞர் காங்கிரஸின் ஆதரவுடன் சசி தரூரும் தேர்தல் களத்தில் இறங்க அதிக வாய்ப்புள்ளது. தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான விருப்பத்தை ஏற்கெனவே பலமுறை வெளிப்படுத்தியுள்ள சசி தரூர், தேர்தல் நடவடிக்கைகள் குறித்து சோனியா காந்தியை கடந்த திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார். 'ஒருவருக்கு ஒரு பதவி' உள்ளிட்ட உதய்பூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு புதிய தலைவருக்கு உள்ளதாக சசி தரூர் கூறி வருகிறார். கட்சி சீர்திருத்தம் குறித்து தொடர்ந்து வலியுறுத்தி வரும் சசி தரூர், தலைவர் தேர்தலுக்கான பரப்புரையை ஏற்கெனவே தொடங்கிவிட்டதாகவே கருதலாம்.

### இருமுனையா? பலமுனையா?

தற்போதுவரை அசோக் கெலாட், சசி தரூர் இடையிலான இருமுனைப் போட்டி ஏறத்தாழ உறுதியாகியுள்ளது.



அதே வேளையில், மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், முகுல் வாஸ்னிக் உள்ளிட்டோரும் தேர்தல் களத்தில் இறங்க வாய்ப்புள்ளது. வேட்புமனு தாக்கல் நிறைவடைந்த பிறகே போட்டி குறித்த தெளிவான பிம்பம் கிடைக்கும்.

### ராகுலுக்கு அதிகரிக்கும் ஆதரவு

தேர்தல் நடைமுறைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் நிலையில், கட்சித் தலைவர் பொறுப்பை ராகுல் காந்தியே மீண்டும் ஏற்க வேண்டும் என்று ராஜஸ்தான், சத்தீஸ்கர், குஜராத், தமிழகம், பிகார், மகாராஷ்டிரம், ஜம்மு-காஷ்மீர், ஹரியாணா உள்ளிட்ட மாநில காங்கிரஸ் செயற்குழுக்கள் ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன. அந்த வலியுறுத்தலை ராகுல் ஏற்பது சந்தேகமே.

அதேவேளையில், மாநில செயற்குழுக்களால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தைக் கட்சித் தலைமை ஏற்க வேண்டிய கட்டாயமில்லை எனக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விளக்கமளித்துள்ளார். எனவே, மாநிலச் செயற்குழுக்களின் தீர்மானம் வெறும் சம்பிரதாய நிகழ்வாகவே இருக்கும்.

### சசி தரூருக்கு எதிர்ப்பு

அசோக் கெலாட் தேர்தலில் போட்டியிட கட்சிக்குள்ளேயே ஆதரவு காணப்படும் நிலையில், சசி தரூருக்கு எதிர்ப்புக் குரல்கள் கிளம்பியுள்ளன. சசி தரூர் தன்னிச்சையாகவே தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்துள்ளதாகவும், கட்சியின் கொள்கைகளை முறையாகக் கடைப்பிடிப் பவர்களுக்கே கேரள மாநில நிர்வாகிகள் தேர்தலில் வாக்களிப்பர் என்றும் கட்சி எம்.பி. கொடி குன்னில் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

### எவரும் போட்டியிடலாம்- ஜெய்ராம் ரமேஷ்

காங்கிரஸ் தலைவர் தேர்தல் வெளிப் படையாக ஜனநாயக முறைப்படி நடைபெறும் எனத் தெரிவித்துள்ள ஜெய் ராம் ரமேஷ், எவர் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம் என்று கூறியுள்ளார். தேர்தலில் போட்டியிடுவதற்காக சோனியா, ராகுலின் ஆதரவைப் பெற வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். 10 காங்கிரஸ் நிர்வாகிகளின் ஆதரவைப் பெற்றுள்ள எவரும் வேட்புமனுவைத் தாக்கல் செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

### அதிகாரபூர்வ வேட்பாளர்- கே.சி.வேணுகோபால்

இடைக்கால தலைவர் சோனியாவை செவ்வாய்க்கிழமை சந்தித்த கட்சியின் அமைப்புச் செயலாளர் கே.சி.வேணுகோபால், தலைவர் தேர்தலில் பலமுனைப் போட்டியைத் தவிர்க் கும் வகையில் 'அதிகார பூர்வ வேட்பாளரை' நிறுத்தலாம் என யோசனை தெரிவித்தார். அதற்கு சோனியா ஆதரவு தெரிவித்த தாகவும் அவர் கூறினார்.

### மீளுமா காங்கிரஸ்?

காங்கிரஸ் தலைவர் தேர்தல் கடைசியாக 2000-ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் போட்டியிட்ட ஜிதேந்திர பிரசாதை சோனியா தோற்கடித்தார். கடந்த 1998-ஆம் ஆண்டுமுதல் தற்போது வரை அவரே கட்சித் தலைமைப் பொறுப்பை வகித்துவருகிறார். இடையில் 2017 முதல் 2019 வரை மட்டும் ராகுல் கட்சித் தலைவராக இருந்தார்.

நேரு குடும்பத்தைச் சாராத கட்சித் தலைவராக சீதாராம் கேசரி கடைசி யாக 1996-98 காலகட்டத்தில் செயல் பட்டார். அதற்குப் பிறகு தற்போது நேரு குடும்பத்தைச் சாராதவர், கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கும் சூழல் உருவாகியுள்ளது. எவர் தலைமைப் பொறுப்பை ஏற்றாலும், கட்சியை வலுப் படுத்தி மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் கோடிக் கணக்கான தொண்டர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# சமூகவெளி, சமூக காலம், சார்பான இனப்படுகொலைகளின் சமூக கேத்திரகணிதத் தத்துவம் சமூகவியலின் நவீன கோட்பாடு!

மருத்துவர் சி. யமுனாநந்தா



சமூகவெளியானது (Social Space) மக்கள் திரட்சியின் வேறுபாடு, மக்களின் வகைப்பாடு, மக்களின் உறவாட்டம் என்பனவற்றில் தங்கி உள்ளது.

சமூகவெளியில் ஏற்படும் மாற்றங்கள் சமூகக் காலங்கள் (Social Time) என அழைக்கப்படுகின்றன. அதாவது சமூக மாற்றங்களின் பருமன் சமூகக் காலம் ஆகும். தொழில்நுட்ப விருத்தி, பொருளாதார முதலீடுகள் சமூகக்காலத்தை அதிகரிக்கும். மக்களினதும், அரசினதும் நடத்தைகளும், அவை இடம்பெறும் பிரதேசங்களும், அவற்றின் திசைகளும் சமூகவெளியின் கேத்திரகணித வடிவில் அமையும். கூட்டான வன்முறை, குடும்ப வன்முறை, தற்கொலைகள், போதைப் பொருள் பாவனை, ஊழல், ஏனையோரைத் தவறாக விமர்சித்தல், மன்னிக்கும் தன்மை இன்மை என்பன சமூக வெளியில் தாக்கத்தைச் செலுத்தும்.

சமூகவெளியில் சமூகத்தைக் கட்டுப்படுத்தும் வலிமையினை அரசாங்கங்கள் கொண்டுள்ளன. சமூகவெளியின் பருமன் அதிகரித்தால் சமூகக்காலம் அதிகரிக்கும். சமூகக்காலத்தின் அசைவின் தன்மை, அதன் வேகமாற்றம் பிணக்குகளை உருவாக்கும்.

கடந்த 150 வருடங்களாக உலக வரலாற்றில் நிகழ்ந்த இன அழிப்புக்களை ஆராயும்போது சமூக வெளியில் ஏற்பட்ட மாற்றங்களும், சமூகக் காலத்தின் வேகமும் முக்கிய பங்களிப்புச் செய்தமையினை கருதுகோள்களாக நவீன சமூகவியலாளர்கள் முன்வைத்து உள்ளனர்.

பிணக்குகள் இனப்படுகொலைக்கு இட்டுச் செல்லும் தன்மையினை ஆராயும்போது மூன்று காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகத்தில்அதிகரிக்கும் வேறுபாடு, கலாசாரங்களுக்கு இடையிலான திண்மை, சமூக வகைப்பாட்டின் குறைவுத்தன்மை என்பன இனப்படுகொலை நிகழ்வதற்கான சமூகவெளியினை உருவாக்குகின்றன.

*1920 - 1930*ம் ஆண்டளவில் ஜேர்மனியில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையும், அக்காலத்தில் ஐரோப்பிய யூத சிறுபான்மையினரது எழுச்சியும், யூத இன மக்கள் மீதான இனப்படுகொலைகளுக்கான சமூகவெளியினையும் சமூகக்காலத்தையும் உருவாக்கின.

சமூகவெளியில் ஏற்படும் விரைவான மாற்றங்கள் பிணக்குகளை அதிகம் தோற்றுவிக்கும். இனப்படு கொலைகள் சமூகத்தில் நடத்தும்போது தவறான குற்றச்சாட்டுக்கள், தவறான கற்பிதங்கள் முன்வைக்கப்படும். இலக்குகளுக்கு எதிராக இனப்படுகொலையாளிகள் உணர் பூர்வமான தீர்மானங்களையே மேற்கொள்வர் இவற்றை ருவாண்டா, மியான்மார், சேர்பியா உட்பட பல நாடுகளில் அவதானிக்கலாம்.

இனப்படுகொலைகள் தொடர்பான சமூகவெளிச் சார்புகளின் அசைவுகளை உண்மையான அறிக்கைகள், தீர்மானங்கள் கட்டுப்படுத்தாது. மாறும் சமூக வெளியில் இனப்படுகொலையின் சமூக பெறுதியினைத் தீர்மானித்தல் இன்றியமையாதவையாகின்றது. அண்மைக் காலத்தில் துருக்கி, ஆர்மேனியா, சேர்பியா, ருவாண்டா, ஆஃதானிஸ்தான், மியன்மார் உட்பட பல நாடுகளில் நிகழ்ந்த இனப்படு கொலைகளை உற்று நோக்கும்போது இனப்படு கொலையாளிகள் தாம் செய்த இன அழிப்புக்களையிட்டுப் பெருமைப்படுதலை விடுத்து அவ்வாறான இனப்படு கொலைகள் நிகழ வில்லை என வாதிடும் வன்மத்தில் உள்ளனர். இதற்கு சமூகவெளியின் சில பொருளாதார முதலீட்டுச் சார்புகள் சாதகமாக உள்ளன. ஒரு நாட்டினை அதன் அரசு கட்டுப்படுத்துவதுபோல் உலகினை ஓரளவு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை கட்டுப்படுத்துகின்றது.

இப் பாதுகாப்புச் சபையின் அதிகாரத்தின் போக்கு சமூக வெளியினையும், சமூகக் காலத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றது.

இனப்படு கொலைக்கான சமூகக் காலத்தில் அதனை நடத்தும் அரசுகள், அரசியல் கட்சிகள் என்பவற்றின் சமூக நடத்தையினை நோக்கும்போது நெருங்கியவர்களுடன் தொடர்பு குறைவடைதல், வேற்றவர்களுடன் தொடர்பு அதிகரித்தல், சமத்துவமற்றவர்களை வகைப்படுத்தல் குறைதல், சமமானவர்களை வேறுபடுத்தல் ஆகியவை அவதானிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியல் முரண்பாட்டிலும் பேச்சுவார்த்தைகள், சர்வகட்சிக் கூட்டங்கள், கூட்டரசாங்கங்கள், சர்வதேச அனுசரணைகள் என்பன இணைந்து தவறான சமூக வெளியினை இனப்படுகொலை நிகழ்வதற்கு ஏதுவாக அமைத்து இருந்தது. சனநாயக வெளியில் இனப்படுகொலைகள் நிகழ்வது சாதாரண விடயமாக மாறிவிட்டது. இனரீதியான ஜனநாயகப் பெரும்பான்மை அரசு சிறுபான்மை இனங்களை அழிக்கும் அதிகாரத்தை உலக வல்லரசுகள் ஆதரித்துள்ளன. ஆபிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, ஆசிய நாடுகளில் இதனை நாம் அவதானித்துள்ளோம்.

தகவல் தொடர்பாடல் விருத்தி பூகோளக் கிராமத்தில் (Global Village) இனப்படுகொலைகள் சாத்தியமில்லை என வரையறுக்க முடியாத நிலைக்கு தற்போதைய சமூக வெளியின் இயக்கம் அமைந்து உள்ளது. சமூகவெளியில் ஏற்படும் பாரிய மாற்றங்கள் பிணக்குகளை உருவாக்கி புதிய புதிய இனப்படு கொலைக் களங்களை உருவாக்கி உள்ளது. சீனாவின் பூகோள வியாபகம் உலகில் பல பிணக்குகளுக்கான பொருளாதார முதலீடாக அமைந்து பல சிறுபான்மை இனங்களை அழித்துள்ளது. சீனாவிற்கு போட்டியாக ஏனைய அரசுகளும் சமூகவெளியில் இனப்படு கொலைக்கான களத்தை அமைத்து உள்ளன.

*1920 - 1930*ம் ஆண்டுகளில் ஐரோப்பாவின் பொருளாதார மந்தநிலைக்கு *1913 - 1919*களில் நிகழ்ந்த ஸ்பானிஸ் சளிச் சுரத்தின் பொருளாதாரத் தாக்கம் காரணமாக இருந்தது. இது சமூக வெளியினை சமூகக் காலத்தைப் பாதித்தது. இதனாலேயே இனப்படுகொலை வெளி அன்று ஏற்பட்டது. அவ்வாறே 2019இல் ஏற்பட்ட கொரோனாத் தொற்றும் உலகில் பொருளாதார மந்த நிலையினை ஏற்படுத்தி உள்ளது. சமூகவெளியில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் ஏற்பட்ட சமூகக்கால மாற்றம் கிழக்கு ஐரோப்பாவில் பாரிய இனப்படுகொலைக்கான சூழலை ஏற்படுத்தி உள்ளது. இதனை ரஸ்சிய உக்கிரெயின் மோதலில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சமூகக்காலத்தின் இயக்கத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கலாசாரம், ஆன்மீகம் என்பன போட்டி போட முடியாது உள்ளது. இதனால் மனிதநேயம், தாவரநேயம், விலங்கு நேயம், சூழல்நேயம், சமூகநேயம் அற்றுப்போகும் சமூகவெளி ஏற்பட்டு உள்ளது. சமூகக்காலத்தின் அசைவு கொரோனாத் தொற்றின்போது மந்தமாகவும், அதன்பின் சில நாடுகளில் மிக விரைவாகவும், சில நாடுகளில் சமூகங்களுக்கு இடையே மந்தமாகவும் அமைகின்றன.

இவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளே பிணக்குகளைத் தோற்றுவிக்கின்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கும், நாடுகளுக்கு இடையிலான சமூகக்கால அசைவுகளின் வேறுபாடுகள் காரணமாக அமைந்து உள்ளன. இதனால் உள்நாட்டில் பிணக்குகள் அதிகரித்து வன்முறைகள் அதிகரிக்கும் சூழல் உள்ளது.


இத்தகைய சந்தர்ப்பத்தில் மீண்டும் மீண்டும் இனஒடுக்கல்கள் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கலாம். எனவே இனப்படு கொலையின் கேத்திரகணிதப் பரிமாணத்தை சமூக வெளியிலும் சமூகக்காலத்திலும் உய்த்தறிதல் தமிழ்ச் சமூகவியலாளர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. எமது சமூகம் தொடர்பான சமூக மூலதனம் எவ்வாறு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்று நாம் சிந்தித்தல் மிகவும் அவசியமானது.


**சமூகவெளியில் ஏற்படும் விரைவான மாற்றங்கள் பிணக்குகளை அதிகம் தோற்றுவிக்கும். இனப்படு கொலைகள் சமூகத்தில் நடத்தும் போது தவறான குற்றச்சாட்டுக்கள், தவறான கற்பிதங்கள் முன்வைக்கப்படும். இலக்குகளுக்கு எதிராக இனப்படு கொலை யாளிகள் உணர் பூர்வமான தீர்மானங்களையே மேற்கொள்வர் இவற்றை ருவாண்டா, மியான்மார், சேர்பியா உட்பட பல நாடுகளில் அவதானிக்கலாம்.**

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1)
2)
3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 4 3 = 15 இங்கு  ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , +  2) + , x  3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ....................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ....................

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

....................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ....................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ....................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ....................

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன  ii) குடிக்கின்றது  iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

....................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1**  **38. 2**  **39. 1**  **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை  2) புராதன
3) காணப்பட்டன  4) அழகு
5) காலி நகரின் அழகு  6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) ×  2) ✓  3) ×  4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1

**26.09.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**26.09.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சமாதானத்தை வேண்டி அமைதிவழி பேரணி!

திருகோணமலை, செப். 26

நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

திருகோணமலை மூன்றாம் கட்டை பகுதியில் ஆரம்பமான இந்த ஊர்வலத்தின் நிறைவாக சர்வோதய நிலையத்தில் மாமரம் நாட்டி வைக்கப்பட்டது. தொடர்ந்து அங்கு கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இளைஞர் திட்ட பிரிவினர், சர்வோதய சர்வமதக்குழுவுடன் இணைந்து இந்த ஊர்வலத்தை உலக சமாதான தினத்தை முன்னிட்டு நடத்தின. (ஐ)

# தமிழ் மக்களை ஏமாற்றும் செயலில் விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும்!

## சாடுகிறார் சாணக்கியன் எம். பி.

கொழும்பு, செப். 26

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தீர்க்கப்படாதுள்ள நிலையில், சி. வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தேசிய பேரவையில் இணைந்து கொண்டமையானது தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்பாடு என்று இரா. சாணக்கியன் விசனம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் களுத்துறையில் நடந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையிலான இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ராஜித்த சேனாரத்ன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, சர்வமதத் தலைவர்கள், பொது மக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சி. வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்வதானது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ)



# காத்தான்குடி மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபம் திறப்புவிழா!

காத்தான்குடி, செப். 26

மட்டக்களப்பு மத்தி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பிரதான ஒன்றுகூடல் மண்டபம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் எம். ஏ. சீ. எம். சத்தார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் பங்கேற்று கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ். எம். எம். எஸ். உமர் மௌலானா, காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.எம். கலாவுதீன், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் உள்ளிட்ட கல்வியதிகாரிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஹெரோயின் கடத்தியவர் கைதானார்!

கல்முனை, செப். 26

ஹெரோயின் போதைப் பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து வெள்ளிக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.

இதில், நிந்தவூர் 9 பிரிவினை பகுதியை சேரந்த 18 வயது இளைஞரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து , 4.2 கிராம் ஹெரோயின், பணம், மோட்டார் சைக்கிள் என்பவை கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டார். (ஐ)



# விவேகானந்தர் இலங்கை வருகை 125ஆவது ஆண்டு நிறைவு விழா!

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் 125ஆவது ஆண்டு நிறைவு தொடர் விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் வரலாற்று சிறப்புமிக்க இலங்கை வருகை தொடர்பாக அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான பஜனை, வழிகாட்டுதல் தியானம், சொற்பொழிவு மற்றும் கேள்வி பதில் போன்ற வளப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் அறிமுக உரையை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஆற்றினார். இந்நிகழ்வுக்கு கொழும்பு இராமகிருஷ்ண சாரதா மிஷன் தலைவி ப்ரவ் ராஜிக சுசாந்தப்ராண மாதாஜி மற்றும் கொழும்பு இராம கிருஷ்ண சாரதா மிஷன் செயலாளர் ப்ரவ்ராஜிக ஆத்ம தேவப்ராண மாதாஜி மற்றும் பிரமச்சாரினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



# கல்முனை பற்றிமா கல்லூரியில் கணித முகாம் நடைபெற்றது!

கல்முனை, செப். 26

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஜெம் செயல்திட்டத்தின் கீழ் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கணித முகாம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு செபமாலை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சஞ்சீவன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. சரவணமுத்து ஓய்வு பெற்ற கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். இலங்கநாதன், கணித பாட ஆசிரியர் ஆலோசகர் ரி.கிருணி வாசன், மற்றும் கணித பாட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .

சிறப்பு அம்சமாக மாணவர்களின் நான்கு வகையான கண்காட்சி இடம்பெற்றது.

மேலும், ஓய்வு பெற்ற கல்முனை வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன், ஆற்றிய சேவைக்காக கல்லூரியால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)





# 149ஆவது ஆண்டு விழாவை ஒட்டி நடைபவனி!

மட்டக்களப்பு, செப். 26

இலங்கையில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றான மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் 149ஆவது ஆண்டு கல்லூரி தினதை முன்னிட்டு மைக் வோல்க் என்னும் தலைப்புடனான நடைபவனியொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது பாடசாலையில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. விசேட பிரார்த்தனைகளை தொடர்ந்து நடைபவனி ஆரம்பமானது. இதில், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

இந்தப் பேரணி பாடசாலை வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி, கல்லடி பாலம் வரை சென்று, மீண்டும் திருமலை வீதியூடாக பாடசாலை வளாகத்தை வந்தடைந்தது.

இதன்போது பாடசாலை மாணவர்களினால் கடந்த காலங்களில் பல்வேறு போட்டிகளின் போது பெறப்பட்ட பரிசில்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன், போதையற்ற நாட்டினை உருவாக்குவோம் என்னும் தலைப்பிலான பதாகைகளையும் பேரணியில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர். (ஐ)

ஈழநாடு



# 3ஆம் உலக போரின் விளிம்பில் உலகம்!

## புடினின் தத்துவாசிரியர் எச்சரிக்கை

மொஸ்கோ, செப். 26

உக்ரைன் போர் உலகப் போராக மாறுகின்றது என்று எச்சரித்திருக்கிறார் ரஷ்யாவின் பூகோள அரசியல் தத்துவாசிரியரும் ஜனாதிபதி புடினின் "குரு" என்று வர்ணிக்கப்படுபவருமாகிய அலெக்சாண்டர் டுகின்.

போர் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தலாம். அதில் ஒன்று அணு ஆயுதப் பேரழிவு. ரஷ்யாவுக்கும் மேற்குக் கூட்டணிக்கும் இடையே இறுதி மோதல் நெருங்குகிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பிய - ஆசியா மையத்தில் ஒரு பேரரசாக ரஷ்யாவை விஸ்தரித்து விரிவுபடுத்துகின்ற கொள்கையின் தத்துவாசிரியர் என்று கருதப்படுபவர் டுகின். கடந்த மாதம் அவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட ஒரு கார் குண்டுத் தாக்குதலில் அவரது மகள் பலியனார் என்பது நினைவிருக்கலாம்.

ஜனாதிபதி புடின் நாட்டைப் போருக்குத் தயார்ப்படுத்தும் அறிவிப்பை வெளியிட்ட பின்னர்,



அதனை வரவேற்றுள்ள ரஷ்யாவின் தீவிர தேசியவாதிகளில் அலெக்சாண்டர் டுகின் முக்கிய மானவர். உக்ரைன் போர் எவ்வாறு முடிவடையலாம் என்பது குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் அவர், ரஷ்யா தோல்வியைச் சந்திக்க நேர்ந்தால் அணு ஆயுதத்தின் அபத்தை மறந்து செயற்படுகின்ற நிலை ஏற்படும். ஓர் அணு ஆயுதப் பேரழிவுக்கு அது வழிகோலும் - என்று எச்சரித்திருக்கிறார்.

மொஸ்கோ அரச பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான டுகின், உக்ரைன் மீதான புடினின் படையெடுப்பை நியாயப்படுத்தி மீண்டும் கருத்து வெளியிட்டுள்ளார். நாங்கள் மூன்றாம் உலகப் போரின் விளிம்பில் இருக்கிறோம், எங்களை அங்கு தள்ளுவதில் வெறித்தனமாக இருப்பது மேற்குலகம் தான். போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுமா என்பது ஒரு திறந்த கேள்வி. ஆனால், அணுசக்திப் பேரழிவு ஒன்றுக்கான நிகழ்தகவு ஒவ்வொரு நாளும் அதிகரிக்கிறது - என்று டுகின் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டைப் போருக்காகப் பகுதி அளவில் அணி திரட்டும் ("partial mobilisation") புடினின் அறிவிப்புக்கு எதிராக ரஷ்ய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன. நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டாய ஆட்சேர்ப்புக்கு அஞ்சி இளவயதினர் ரஷ்யாவிலிருந்து வெளியேறிவருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகின. எனினும், இந்தத் தகவல்களை கிரெம்ளின் மாளிகை மறுத்துள்ளது. (ஐ)



## ஜப்பானில் புயல் தாக்கம் பல்லாயிரம் பேர் பாதிப்பு!

### இருவர் உயிரிழப்பு

ரோக்கியோ, செப். 26

மத்திய ஜப்பானை நேற்று முன்தினம் தாக்கிய தலாஸ் சூறாவளி தாக்கங்களால் இருவர் உயிரிழந்தனர். மின்சாரம் தடைப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தலைநகர் ரோக்கியோவின் தென்மேற்கே உள்ள ஷிசுவோகா நகரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சூறாவளி நகரும்போது வியாழக்கிழமை முதல் இங்கு சுமார் 417 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

புயல் காற்றில் சிக்கி நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. கட்டடங்களின் மேற்கூரைகள் பல மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டன. சூறாவளி காற்றுடன் கனமழை கொட்டியதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

கனமழை காரணமாக முக்கிய நீர்நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. சாலைகள், மேம்பாலங்கள் உள்ளிட்டவை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. புயலால் பல்வேறு ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சுமார் 120,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நிலச்சரிவால் மின்கம்பங்கள் பல சாய்ந்துள்ளதால் மின் தடை ஏற்பட்டுள்ளதாக மின் விநியோக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சூறாவளி, மழை, வெள்ளத்தை தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்தார். 29 வயதுடைய நபர் ஒருவர் காருடன் நீர்த்தேக்கத்தில் விழுந்ததில் இறந்தார் என கியோடோ செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## பாதுகாப்பு, கவனமற்ற சிகிச்சை; வருடாந்தம் 26 இலட்சம் பேர் பலி!

புதுடில்லி, செப். 26

பாதுகாப்பும் கவனமுமற்ற சிகிச்சையால் வருடாந்தம் 26 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை பாதுகாப்பானதாகவும், கவனத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். எனினும், உலகின் பல பகுதிகளில் இத்தகைய சிகிச்சை நோயாளிகளுக்கு கிடைப்பதில்லை என்பதை புள்ளி விவரத்துடன் தெரிவிக்கிறது உலக சுகாதார நிறுவனம்.

குறிப்பாக, குறைந்த வருவாய் கொண்ட நாடுகள் மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் பாதுகாப்பான, கவனத்துடன் கூடிய சிகிச்சை வழங்கப்படாததால் ஆண்டுதோறும் 26 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று அந்த அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கான தலைவர் பூணம் கேட்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற சிகிச்சை, கவனக்குறைவான சிகிச்சை என்பது பல காரணங்களால் நிகழ்வதாக தெரிவித்த அவர், பாதுகாப்பற்ற மருந்துகளை கொடுக்கும் முறை, தரமான மருத்துவ உள்கட்டமைப்பு இன்மை, பணியாளர் பற்றாக்குறை போன்றவை முக்கிய காரணங்களாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, வயதான நோயாளிகளுக்கு தீங்கு விளைவிக்கும் மருந்துகள் கொடுக்கப்படுவதை தடுக்கவும், விரைவான உயர் சிகிச்சை கிடைக்கவும், தரமான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவும் உலக சுகாதார நிறுவனம் பிராந்தியம் அளவில் கவனம் செலுத்தி வருவதாக பூணம் கேட்ரபால் சிங் கூறியுள்ளார். (ஐ)



## முக்கிய நட்பு நாடுகளின் பட்டியல் ஆப்கானை நீக்கியது அமெரிக்கா!

வாஷிங்டன், செப். 26

நேட்டோ அல்லாத முக்கிய நட்பு நாடுகளின் பட்டியலில் இருந்து ஆப்கானிஸ்தானை நீக்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்து ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

கடந்த 2012 இல் ஆப்கானிஸ்தானை நேட்டோ அல்லாத முக்கிய நட்பு நாடாக அமெரிக்கா அறிவித்தது. இது இரு நாடுகளுக்கும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவைப் பேணுவதற்கான வழியை உருவாக்கியது. இந்தப் பதவி ஆப்கானிஸ்தானுக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான உதவி மற்றும் உபகரணங்களின் அடிப்படையில் பல வசதிகள் மற்றும் சலுகைகளை வழங்கியது.

கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறியமையைத் தொடர்ந்து, கிட்டத்தட்ட 20 ஆண்டுகால போர் முடிவுக்கு வந்தது.

அமெரிக்கா இப்போது 18 முக்கிய நேட்டோ அல்லாத நட்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஆர்ஜென்ரீனா, அவுஸ்திரேலியா, பஹ்ரைன், பிரேசில், கொலம்பியா, எகிப்து, இஸ்ரேல், ஜப்பான், ஜோர்டான், குவைத், மொராக்கோ, நியூசிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கட்டார், தென் கொரியா, தாய்லாந்து மற்றும் துனிசியா ஆகியன இதில் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உக்ரைனின் பகுதிகளை இணைக்க வாக்கெடுப்பு நடத்துகிறது ரஷ்யா!

மொஸ்கோ, செப். 26

உக்ரைன்மீது ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், லுஹான்ஸ்க் உள்ளிட்ட 4 நகரங்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக ரஷ்யா வாக்கெடுப்பு நடத்தி வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆயுதம் மற்றும் நிதி உதவி செய்து வருகின்றன. 6 மாதங்களைக் கடந்து போர் நடைபெற்று வருகிறது.


இந்நிலையில், தங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய நகரங்களை தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதியில் ரஷ்ய அதிகாரிகள் வெள்ளிக்கிழமை முதல் வாக்கெடுப்பு நடத்தி வருகின்றனர்.

தேர்தல் அதிகாரிகள் நடமாடும் வாக்குப்பதிவு மையத்துடன் வீடு வீடாக சென்று வாக்கெடுப்பு நடத்துகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பாகப் பொலிஸாரும் செல்கின்றனர். இந்த வாக்கெடுப்பு நாளை செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

உக்ரைனின் பெரும்பகுதியை இணைத்துக்கொள்ள ரஷ்யா நடத்தும் இந்த வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என உக்ரைனும் மேற்கத்திய நாடுகளும் தெரிவித்துள்ளன. இந்த வாக்கெடுப்பை தோல்வியடையச் செய்ய வேண்டும் என ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்கு உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏற்கெனவே கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ஆக்கிரமித்த ரஷ்யா, பின்னர் வாக்கெடுப்பு நடத்தி தன்னுடன் இணைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.



# கண்ணீருடன் விடைபெற்றார் ரோஜர் பெடரர்

லண்டன், செப். 26

ரென்னிஸ் சாம்ராஜ்யத்தில் கொடிக்கட்டி பறந்த சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தனது கடைசி ஆட்டத்தில் கண்ணீர் மல்க ஓய்வு பெற்றார்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில்உள்ள ஓ2 அரங்கில் லேவர் கிண்ண ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் ரபேல் நடாலுடன் இணைந்து விளையாடிய இரட்டையர் பிரிவு ஆட்டம் நேற்று நடைபெற்றது.

ஐரோப்பிய அணிக்காக களமிறங்கிய பெடரர், நடால் ஜோடி, உலக அணியை சேர்ந்த அமெரிக்காவின் ஜாக் சோக், பிரான்சஸ் தியாபோஜோடியை எதிர்கொண்டது.

முழங்கால் அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்த பெடரர் கடந்த 14 மாதங்கள் எந்தவித போட்டியிலும் விளையாடவில்லை. இதனால் அவரின் ஆட்டம் எப்படி இருக்கப்போகிறது என்பதைக் காண அனைவரும் ஆவலுடன் இருந்தனர். பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையில் பெடரர் சிறப்பாகவே ஆட்டத்தை தொடங்கினார். முழுவேகத்துடன் அவரால் விரைவாக செயல்பட முடியவில்லை என்றாலும் அவரின் ரென்னிஸ் மட்டை வழக்கம் போல் ஜாலம் காட்டியது.

முதல் செற்றை 6-4 என வெற்றிகரமாக கைப்பற்ற உதவினார். எனினும் 2ஆவது செற்றை மிக நெருக்கமாக 6-7 என பறிகொடுத்தது பெடரர், நடால் ஜோடி.

பெடரரின் புகழ்பெற்ற ரென்னிஸ் வாழ்க்கை பயணத்தின் முடிவு இரண்டாவது செற்றின் இறுதியில் வெற்றியை தீர்மானிக்க சமநிலை உடைப்பு வரை சென்றது. பெடரரின் சர்வீஸில் 9-8 என்ற போட்டி புள்ளி இருந்தபோதிலும், அவர்களின் தோல்வி தவிர்க்க முடியாமல்போனது. முடிவில் இந்த ஆட்டத்தில் 6-4, 6-7, 9-11 என்ற செற் கணக்கில் பெடரர், நடால் ஜோடி தோல்வி அடைந்தது.

தொடர்ந்து ரோஜர் பெடரரின் பிரிவு உபசார விழா நடைபெற்றது. அப்போது பல உணர்ச்சிகரமான தருணங்களை காண முடிந்தது. முதலில் பெடரர் கண்ணீர்



சிந்தினார். இதன்பிறகு அவர் அருகில் இருந்த நடாலும் அழ ஆரம்பித்தார். இரு பிரபல வீரர்கள் அருகருகே அமர்ந்து அழுது கொண்டிருந்தது ரசிகர்களை மிகவும் உணர்ச்சிவசப்பட வைத்தது.

பெடரர் கூறும்போது, "எனது மனைவி மிர்கா நினைத்திருந்தால் என்னை நீண்ட காலத்துக்கு முன்பே ரென்னிஸ் விளையாடவிடாமல் தடுத்திருக்கலாம். ஆனால் மிர்கா அதை செய்யவில்லை. தற்போது நினைவுகூர்ந்தாலும் இது வியப்பாக இருக்கிறது. அவருக்கு நன்றி. ரபேல் நடாலுடன் ஒரே அணியில் இணைந்து விளையாடியது சிறப்பாக இருந்தது. இங்கு விளையாடிய வீரர்கள், போட்டியை காண வந்த ரசிகர்கள், ஜாம்பவான்கள் அனைவருக்கும் நன்றி" என்றார்.

ரபேல் நடால் கூறும்போது, "ரோஜர் பெடரர் ரென்னிஸ் போட்டியைவிட்டு வெளியேறுவது என் வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதி வெளியேறுவதை போன்று உணர்கிறேன். ஏனெனில் என் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களில் எனக்கு அடுத்ததாக அல்லது எனக்கு முன்னால் அவர், இருந்துள்ளார். இதனாலேயே நான் உணர்ச்சிவசப்பட்டேன். இதை விவரிப்பது கடினம், ஆனால் இது அற்புதமான தருணம்" என்றார். (ஐ)




# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா!

ஹைதராபாத், செப். 26

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபது - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றுள்ளது இந்திய கிரிக்கெட் அணி.

மூன்றாவது இருபது - 20 போட்டியில் 187 ஓட்டங்கள் இலக்கை விரட்டி கிண்ணத்தை வென்றது இந்தியா. இந்த வெற்றி உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக சிறப்பான தொரு வெற்றியாக இந்தியாவுக்கு அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இந்த தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா தலா ஒரு வெற்றியை பெற்று தொடரை 1-1 என சமன் செய்தன. இந்நிலையில், மூன்றாவது இருபது - 20 போட்டி நேற்று ஹைதராபாத் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, களத் தடுப்பைத் தேர்வு செய்தார். இதன்படி அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்பிற்கு 186 ஓட்டங்களை எடுத்தது.

187 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது.

இந்திய அணிக்காக அணித் தலைவர் ரோஹித் மற்றும் கே. எல்.ராகுல் இன்னிங்ஸை தொடக்கம் கொடுத்தனர். ராகுல் முதல் ஓவரில் ஓர் ஓட்டம் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார். ரோஹித் 17 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார். பின்னர் சூர்யகுமார் யாதவ் மற்றும் விராட் கோலியும் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம் அமைத்தனர். இருவரும் 62 பந்துகளில் 104 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

சூர்யகுமார் யாதவ், 36 பந்துகளில் 69 ஓட்டங்கள் எடுத்து வெளியுறினார். 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளை அவர் விளாசியிருந்தார். கோலி தனது 33ஆவது இருபது - 20 கிரிக்கெட் அரைச்சதத்தை பதிவு செய்தார்.

கடைசி 4 ஓவர்களில் இந்திய அணியின் வெற்றிக்கு 39 ஓட்டங்கள் தேவைப்பட்டன. களத்தில் கோலி மற்றும் பாண்ட்யா இருந்தனர். இறுதி ஓவர் வரை ஆட்டம் சென்றது. கடைசி ஓவரை டேனியல் சாம்ஸ் வீசியிருந்தார். முதல் பந்தில் சிக்ஸர் விளாசினார் கோலி. அதன் மூலம் 5 பந்துகளில் 5 ஓட்டங்கள் இந்திய அணியின் வெற்றிக்கு தேவைப்பட்டன. ஆனால், இரண்டாவது பந்தில் கோலி அவுட்டானார். அவர் 47 பந்துகளில் 63 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

தொடர்ந்து தினேஷ் கார்த்திக் களத்துக்கு வந்திருந்தார். ஐந்தாவது பந்தில் பௌண்ட்ரி விளாசி இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தார் ஹார்திக். 19.5 ஓவர்களில் 187 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. ஹார்திக் 16 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை களத்தில் இருந்தார்.

முன்னதாக ஆடிய அவுஸ்திரேலிய அணிக்கு அரோன் பின்ஞ் மற்றும் கமரூன் கிறீன் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக அந்த அணி சார்பில் களமிறங்கி இருந்தனர்.

முதல் ஐந்து ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 62 ஓட்டங்களை குவித்தது அந்த அணி.

குறிப்பாக கமரூன் கிறின் 21 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். 19 பந்துகளில் அரைச்சதத்தை பதிவு செய்திருந்தார் அவர். இந்திய அணிக்கு எதிராக இருபது - 20 கிரிக்கெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிவேக அரைச்சதம் இது. பின்ஞ், ஸ்மித், மக்ஸ்வெல் போன்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் விக்கெட்டை இழந்திருந்தனர். பின்னர் வந்த இங்க்லீஸ் 22 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த மத்தியூ வேட், ஓர் ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவர் வரை துடுப்பெடுத்தாடியசெய்த ரிம் டேவிட், 27 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய அணிக்காக அவர் பதிவு செய்துள்ள முதல் அரைச்சதம் இது. டேனியல் சாம்ஸ், 20 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்தியா சார்பில் அக்சர் பட்டேல் 3 விக்கெட், புவனேஷ்வர், சஹால் மற்றும் ஹர்ஷல் ஆகியோர் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர். (ஐ)

# ஆர்ப்பாட்டத்தில் கைதானோர் உடன் விடுவிக்கப்பட வேண்டும்!

### சர்வதேச மன்னிப்பு சபை வேண்டுகோள்!

கொழும்பு, செப்.26

**நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட 84 பேரையும் விடுதலை செய்யவேண்டும் என சர்வ தேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

நேற்று முன்தினம் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 84 பேரையும் கைதுசெய்தமையின் மூலம் இலங்கை அதிகாரிகள் கருத்து வேறுபாடுகளை தாங்கள் சகித்துக் கொள்ளப் போவதில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

கருத்து வேறுபாடுகளை கொண்டவர்களை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகவே இவர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 14 வயது சிறுவனும் கைது!

கொழும்பு, செப். 26

பெற்றோருடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட14 வயது சிறுவன் ஒருவனும் நேற்று கைது செய்யப்பட்டான் என்று ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தனது டுவிற்றர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார். பெற்றோருடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட 14 வயது சிறுவனையும் கைது செய்துள்ளனர். தடுப்பில் சிறுவனை பார்த்த சட்டத் தரணிகள் உடனடியாக தலையிட்டு சிறுவனை விடுதலை செய்தனர் என்றும் தெரிவித்தார்.

இதேசமயம், 17 வயது யுவதியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# பால் புரைக்கேறி குழந்தை மரணம்!

வடமாட்சி, செப். 26

தாய்ப்பால் புரக்கேறியதில் 10 மாத குழந்தை உயிரிழந்தது.

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தைக்கு தாயார் பால் கொடுத்த போது பால் புரக்கேறியதில் குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து பெற்றோர் அம்பன் வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டுசென்றனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது குழந்தை உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# விலங்குகளுக்கான உணவுக்காக சோள உற்பத்தியை உயர்த்த முடிவு!

### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர



கொழும்பு, செப். 26

கோழித் தீவன விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பேராதனை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் 24ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

அடுத்த சிறுபோக பயிர் செய்கையின் போது சோள உற்பத்தியை அதிகரிக்க திட்டமிப்பட்டுள்ளது. இதன் மூலம் விலங்குணவு உற்பத்தியை அதிகரித்து கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை ஏற்றத்தைக் குறைக்க முடியும்.

இன்று கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை ஏற்றத்தில் விலங்குணவு விலையேற்றம் முக்கிய பங்களிப்பை செலுத்துகிறது. கோழிப் பண்ணையாளர்கள் அதிக விலை கொடுத்து கோழித் தீவனத்தை கொள்வனவு செய்வதால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது.

விலங்கு உணவுக்கான செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கோழி மற்றும் முட்டை விலையேற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். எனவே அடுத்த சிறுபோகத்தின் போது சோள உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார். (ஐ)

# இளைஞர்களின் எழுச்சி உள்ளது என்பதை மறைக்கவே முடியாது!

### அமைச்சர் ரொசான் ரணசிங்க

கண்டி, செப். 26

நாட்டில் இளைஞர்களின் எழுச்சி ஒன்று உள்ளது என்பதில் மறைக்க ஒன்றும் இல்லை என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் மகாவலி குடியேற்ற பகுதியில் உள்ளவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் வைபவத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் இளைஞர்களின் எழுச்சியை அவதானிக்க முடிந்தது. இது ஏதோ ஒரு வகையில் இளைஞர்களின் மன உளைச்சலை வெளிப்படுத்துகிறது. எனவே, நாட்டில் பாரிய பிரச்சனை ஏற்பட்டு மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்பதில் இரு கருத்துக்கள் இல்லை.

அந்த அடிப்படையில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு எமது அமைச்சு இயன்றளவு உயர் நிலையில் ஏதாவது செய்யலாம் என திட்டமிடப்படுகிறது. எனது அமைச்சின் கீழ் மகாவலி காணிகளும் வருகின்றன. நாட்டிலுள்ள மொத்த காணிகளில் மூன்றில் ஒரு பங்கு மகாவலி திட்டத்தின் கீழ் உள்ளது.

மகாவலி குடியேற்றங்களில் 3 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் அவ்வப்போது குடியேற்றப்பட்டனர். அவை கூட்டுக் குடும்பங்களாக அதிகரித்து இன்று அவர்களுக்கு மத்தியில் காணிப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேற்குறிப்பிட்ட இவர்களில் சுமார் இரண்டு இலட்சம் பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. 15 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகள் கையளிக்கப்படவுள்ளன. மேலும், ஒரு இலட்சத்து முப்பத்து ஐயாயிரம் பேருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு அங்குல காணியையும் உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இஸ்ரேல் பாலைவனத்தில்கூட சக்தியை குவித்து நவீன தொழில் நுட்பம் மூலம் காய்கறி உற்பத்திசெய்கிறது. இன்று இஸ்ரேல் காய்கறி ஏற்றுமதி செய்யும் நாடாக உள்ளது.

சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு டொலர் பிரச்னை உண்டு. நாட்டில் அத்தியாவசிய தேவைகளாக எரிபொருள், பசளை போன்றவை காணப்படுகின்றது. அதில் ஒன்றான மின்சார உற்பத்தியை சூரிய சக்தியில் இருந்து உற்பத்தியாக்குவது முக்கியமாகும், ஆனால் அதற்கு டொலர் பிரச்னை தடையாக உள்ளது. எனவே அதற்குறிய வெளிநாட்டு முதலீட்டாளர்களை தேடிப்பிடிக்க வேண்டி உள்ளது. எனவே, காலப் போக்கில் படிப்படியாக நாடு முன்னேறும் என்ற நம்பிக்கை உண்டு - என்றார். (ஐ)

# பாராளுமன்றை கலைத்து தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி அவதானம்!

### ஆதரிப்போம் என்கிறார் வாசுதேவ

கொழும்பு, செப். 26

பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார். நாட்டு மக்களுக்கு பாராளுமன்றம் மீது நன்மதிப்பு கிடையாது. ஆகவே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்ல ஆதரவு வழங்குவோம் என்று ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும்,

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதை தடுக்க பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை நாட்டு மக்கள் கடுமையாக வெறுக்கும் பின்னணியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் கிடையாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் கடுமையான அழுத்தத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 38 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

எதிர்வரும் நாட்களில் அமைச்சரவையையும் விஸ்தரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை வெறுக்கத்தக்கது. அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை. பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணபதாக குறிப்பிட்டுக்கொண்டு தேசிய சபை என்ற பாராளுமன்ற குழுவை அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேசிய பேரவையின் செயல்பாடுகள் குறித்து தெளிவற்ற தன்மை காணப்படுகிறது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துமாறு அரசியல் கட்சிகள் குறிப்பிட்டுள்ள நிலையில் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு பாராளுமன்றம்மீது நன்மதிப்பு கிடையாது. ஆகவே பாராளுமன்றத்தை கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு செல்ல ஆதரவு வழங்குவோம் - என்றார். (ஐ)

## திலீபன் நினைவேந்தலில்...

வண்ணன் அணிகள் என இரு பிரிவுகளாக செயல்பட்டு வருவது அறிந்ததே. இந்நிலையில், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நாளின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று நடக்கின்றன. இந்நிலையில், இது தொடர்பான ஆயத்த நடவடிக்கைகளுக்காக மணிவண்ணன் அணியை சேர்ந்த வ. பார்த்தீபன், தனுஜன் ஆகியோர் நினைவுத் தூபிக்கு சென்றுள்ளனர்.

அச்சமயம் அங்கிருந்த கஜேந்திரகுமார் அணியினர் அவர்களுடன் முரண்பட்டனர் என்று கூறப்படுகின்றது. இதன்போதே அவர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

முன்னதாக, திலீபன் நினைவேந்தலின் 11ஆவது நாளான நேற்று நினைவு தூபி அருகே பொதுக் கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இதன்போது பந்தலில் அமர்ந்திருந்தவர்களுடனும் முன்னணியின் கஜேந்திரகுமார் அணியினர் முரண்பட்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

கடந்த காலங்களில் தியாகி திலீபனுக்கு நினைவேந்தலுக்கு பொலிஸார் தடை உத்தரவுகளை நீதிமன்று மூலமாக பெற்று அஞ்சலி நிகழ்வுகளை நடக்க விடாமல் செய்தனர். தடைகளை மீறி அஞ்சலி செய்தோரை கைது செய்தனர். அந்த நிகழ்வுகளை வலுக்கட்டாயமாக குழப்பினர் இந்நிலையில், இம்முறை அஞ்சலி நிகழ்வுகளை சுமுகமாக நடத்தும் சூழ்நிலை உள்ள நிலையில் அரசியல் கட்சிகளின் முரண்பாடுகளால் தமிழினத்துக்காக உயிர் தியாகம் செய்த திலீபனை நிம்மதியாகவும் - ஒழுங்குமுறையாகவும் நினைகூர முடியாத நிலை காணப்படுவதாக தமிழ்த் தேசியவாதிகள் விசனம் தெரிவித்தனர். (ஐ)

## இலங்கை...

மற்றும் வர்த்தக தீர்வுக்காக நாங்கள் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கினோம்" இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

நேற்று ஐ. நாவின் 77ஆவது மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உலகளாவிய கவனம் உக்ரைனில் இருக்கும் அதே வேளையில், இந்தியா மற்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எமது அயல்நாடுகளில் சில கோவிட் தொற்றுநோய் மற்றும் தற்போதைய மோதல்களால் மோசமாக பாதிக்கப்பட்டன. இந்த நிலையில், விதிவிலக்கான நடவடிக்கைகளை எடுத்து இந்தியா அவர்களுக்கு - அயல் நாடுகளுக்கு உதவியது - என்றார். (ஐ)

## எரிபொருள்...

சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் உள்ளூர் சந்தையில் அதனை நேரடியாக பிரதிபலிக்க முடியாது.

தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருள் கடந்த காலங்களில் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணய நெருக்கடி எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக நாணய கடிதங்களை விடுவிப்பதில் சிரமங்களுக்கு வழிவகுத்தது - என்றும் குப்தா மேலும் கூறினார்.

இதேவேளை, டபிள்யூ ரி. ஐ. மசகு எண்ணெய் பீப்பாய் 78.74 டொலராகவும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் 86.15 டொலராகவும் சர்வதேச சந்தையில் விற்பனையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திலீபன்...

யாகம் செய்தார்.

இந்நிலையில், அவரின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படுகின்றது. இம்முறை நினைவேந்தல் தமிழ் பேசும் மக்களின் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் சிறப்பாக நினைவேந்தப்படுகின்றது.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபியில் நடைபெறவுள்ளது. திலீபன் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று ஆரம்பமான ஊர்தி பவனி இன்று காலை திலீபன் நினைவுத் தூபியை வந்தடையும். தொடர்ந்து திலீபன் உயிர் தியாகம் செய்த முற்பகல் 10.48 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். (ஐ)

## தியாகி...

பன் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினரால் நேற்று பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் ஓர் அங்கமாக அடையாள உண்ணாவிரத போராட்டமும் நடைபெற்றது. இதில், பலர் பங்கேற்றனர்.

காலை 8 மணிக்கு ஆரம்பித்த உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு நிறைவு செய்யப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் நீராகாரம் வழங்கி உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்து வைத்தனர்.

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

## அரசமைப்புக்கு...

வடிக்கைகள் மற்றும் எமது வலுவான சுகாதாரப் பாதுகாப்பு உட்கட்டமைப்பின் பயனுள்ள விநியோகத் திறன்களின் விளைவாக பெரும்பாலும் வெற்றிகரமாக உள்ளது.

காலநிலையால் பாதிக்கப்படக்கூடிய நாடாக, காலநிலை மாற்றம் இலங்கையின் சமூகப் பொருளாதார முன்னேற்றம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. 2050ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலைமையை அடைவதற்காக உமிழ்வைக் குறைக்கும் நோக்கத்துடன் கடந்த ஆண்டு காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் இலக்குகள் மற்றும் எமது புதுப்பிக்கப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களைப் பூர்த்தி செய்வதாக இலங்கை உறுதியளித்துள்ளது. இந்த உறுதிமொழிகள் பசுமைப் பொருளாதார அபிவிருத்தியின் நோக்கங்களை எதிர்மறையாக பாதிக்கக்கூடாது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

2030க்குள் உலகம் 'பூச்சிய பட்டினி'யை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்ட மைல்கற்களை எட்டாமல் போகும் வாய்ப்புள்ளது. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு பெரும் ஆபத்தில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை அறிகுறிகள் குறித்து இலங்கை தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. விவசாயத்தை நவீனமயமாக்கப்பட்ட துறையாக நிலையான மாற்றத்தை இலங்கை ஆதரிப்பதுடன், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட உணவு உற்பத்தியை ஊக்குவிக்கின்றது. எந்தவொரு குடிமகனும் உணவுத் தேவைக்காக துன்பப்படக் கூடாது. எந்தவொரு குழந்தையும் போசாக்கு இன்மைக்கு பலியாகி விடக் கூடாது என்ற இரு நோக்கங்களுடன் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை இலங்கை ஆரம்பித்துள்ளது.

கல்வியை வழங்குவதற்கான டிஜிற்றல் முறைகளுக்கு விரைவான மாற்றங்கள் கல்வி அமைப்பில் உலகளாவிய அணுகல், குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் குழந்தைகளில் பங்கேற்பு மற்றும் உயிர் வாழ்வை அச்சுறுத்தியது. இலங்கை டிஜிற்றல் பிளவைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், எந்தவொரு குழந்தையும் பின்தங்கியிருக்காது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை பல தசாப்தங்களாக பயங்கரவாதத்துக்கு பலியானது. பயங்கரவாதிகளின் இலக்குகளைத் தேர்ந்தெடுப்பது, நிதி மற்றும் தீவிரமயமாக்கல் முறைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துவது தொடர்ந்தும் உருவாகி வருகின்றது.

வன்முறைத் தீவிரவாதத்துக்கு வழிவகுக்கும் தீவிர சித்தாந்தங்களை எதிர்ப்பதற்கும், பயங்கரவாதிகளின் இணையம் மற்றும் சமூக ஊடகத் தளங்களின் பயன்பாடு மற்றும் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என்றும் கூறினார். (ஐ)

### வனப் பாதுகாப்பு வலய அங்கீகாரம்

# சாம்பல்தீவு தொடர்பில் முடிவு எட்டப்படவில்லை!

யாழ்ப்பாணம், செப். 26

சாம்பல்தீவை வனப் பாதுகாப்பு வலயமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை எடுக்கவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகர் சி. தவராசா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சாம்பல்தீவு, நாயாறு, நந்திக்கடல் பகுதிகள் வனவள பாதுகாப்பு வலயங்களாக அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்று வெளியான செய்தி தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுள், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை எனப்படும் நீரியல் உயிரின வளர்ப்பு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடங்களை விடுவித்தல் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

வனவள அமைச்சர் மகிந்த அமரவீர, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுற்றுச்சூழல் அமைச்சர் நஸீர் அகமட் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சாம்பல்தீவை வனப் பாதுகாப்பு வலயமாக அங்கீகரிக்கும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் மீண்டும் சந்தித்து கலந்துரையாடுவது என்றே முடிவு எட்டப்பட்டது. அத்துடன், சாம்பல்தீவை அங்கீகரிப்பது குறித்து எந்த வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க பணிப்பு!

கொழும்பு, செப். 26

க. பொ. த. சாதாரண தரம் சித்தியடைந்து உயர்தரத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, 99 கல்வி வலயங்களைச் சேர்ந்த 2,970 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 99 கல்வி வலய அலுவலகங்களில் இருந்து தலா 30 புலமைப்பரிசில் வெற்றியாளர்களை தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை அதிகபட்சமாக 24 மாதங்களுக்கு மாதாந்தம் ரூ.5,000 உதவித்தொகையாக வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி க. பொ. த. உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளதுடன், புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் கோரப்படும்.

இதன்படி, இந்தப் பொறிமுறை தொடர்பில் அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு உடனடியாக அறிவிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

## இன, மத...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருந்தூர் மலை, திருக்கோணேஸ்வரம் விவகாரங்கள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இடையில் எழுந்துள்ள கருத்து மோதல்கள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இனவாத, மதவாத ரீதியில் கருத்துக்களை வெளியிடுவோர் நாட்டின் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வோர் இனத்தவர்களும் தங்களுக்குரிய முழுமையான உரிமைகளைக் கோரி நிற்பார்கள். அதேவேளை, ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் மத உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

எனவே, இன, மத ரீதியில் எழும் பிரச்னைகளுக்குப் பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும். அதைவிடுத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு பிரச்னைகளைப் பெரிதுபடுத்த எந்தத் தரப்பினரும் முயலக் கூடாது" - என்றார்.

ஈழநாடு
Eelanadu

## கைதான போராட்டக்காரர்கள் பிணையில் செல்ல அனுமதி!

கொழும்பு, செப். 26

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போராட்டத்தில் கைது செய்யப்பட்ட 83 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவைப் பிறப்பித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சோசலிஷ இளைஞர் சங்கம் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்தப் போராட்டம் லிப்டன் சுற்றுவட்டம் அருகே சென்றபோது பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தனர். அத்துடன், 84 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர மற்றும் இரண்டு தேரர்கள் நேற்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களை பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

இதேதேநேரம் ஏனைய 81 பேரும் காவல்துறை பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## ஊட்டச்சத்து பிரச்சனைகளை கண்டறிய கணக்கெடுப்பு!

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, செப். 26

ஊட்டச்சத்து பிரச்சனைகளை கண்டறிவதற்கான கணக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் பதிவாகிய சம்பவங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர், கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உரிய கணக்கெடுப்பின் தரவுகளின் அடிப்படையில் விரைவில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள் ரணில் விரைவில் உணர்வார்!

### இராதகிருஷ்ணன் எம். பி.

நுவரெலியா, செப். 26

செஞ்சோற்று கடன்தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்ததையும், ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் உணர்வார்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கட்சி தலைவர்களின் அனுமதி இன்றியே தேசிய பேரவைக்கு உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர் எனவும், மனோ கணேசன் வெளிநாட்டில் உள்ள நிலையில் அவரின் பெயர்கூட இடம்பெற்றுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று அக்கரைபத்தனையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட ரீதியில் நல்லவர், இன்றும் அவரை நாம் மதிக்கின்றோம். ஆனால், அவர் இன்று இருக்கும் இடம்தான் சரியில்லை. அதாவது தனி ஆளாக இருப்பதால், செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து, வஞ்சத்தில் வீழ்ந்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் வஞ்சகர்கள் என்பதையும் அவர் உணர்வார். மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ராஜபக்ஷக்களின் சொல் கேட்டே ஜனாதிபதி ரணில் இதனை செய்துள்ளார்.

அரசாங்கத்தில் இணைவதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் ஆணை இல்லாத இந்த ஆட்சியை அங்கீகரிப்பதற்கு நாம் தயாரில்லை. சர்வதேச சமூகம்கூட இந்த அரசாங்கத்தை ஏற்கவில்லை. மக்கள் ஆணையுடன் புதிய அரசாங்கமொன்று அமைய வேண்டும். அவ்வாறு அமையும் அரசாங்கத்துக்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

கொழும்பில் நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் தாக்கியுள்ளனர். குறைந்த பட்ச அதிகாரத்தை பயன்படுத்தாமல், தடியடிகூட நடத்தியுள்ளனர். இந்த அடக்குமுறை செயல்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டில், கருத்து சுதந்திரம் உள்ளதென வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் உரையாற்றுகின்றார். ஆனால், அமைதியாக போராடும் சுதந்திரம்கூட நாட்டில் இல்லை. எதிர்காலத்தில் போராட முடியாத வகையில் பல இடங்கள் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது அடக்குமுறையின் உச்சகட்டம். அதனை எதிர்க்கின்றோம். ஜனநாயகம் இல்லாத அதேபோல அடக்கி - ஒடுக்கி ஆளும் அரசாங்கத்துக்கு உலக நாடுகள் உதவாது என்பதை புரிந்து செயற்பட வேண்டும்.

தேசிய பேரவையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது. ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி என்பனவும் மறுத்துள்ளன. நாமும் அதனை ஏற்கவில்லை. பெயர் இடம்பெற்றுள்ளமை தமக்கு தெரியாது என விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர். மனோ கணேசன் வெளிநாட்டில் உள்ளார். அவரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது." - என்றார். (ஐ)

# ஜனாதிபதி ரணில், ராஜபக்ஷ அரசு அடக்குமுறையை நிறுத்தவேண்டும்!

### ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார



கொழும்பு, செப். 26

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷ அரசும் முன்னெடுத்து வரும் ஜனநாயக விரோத அடக்குமுறை செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம். பி. வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக அறிய மருதானை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த போதே அவர் இதனை ஊடகங்களிடம் கூறினார்.

மேலும், "உள்ளே தள்ள வேண்டியவர்கள் வெளியில். வெளியில் இருக்க வேண்டியவர் உள்ளே இருக்கின்றனர். இது மிகவும் அமைதியான ஆர்ப்பாட்டம். எவரும் சீர்குலைக்கும் வகையில் நடந்துகொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷவினரும் நாட்டின் ஜனநாயகத்தை முழுமையாகக் குழித்தோண்டிப் புதைத்து அச்சத்தில் பதுங்கு குழிகளில் வாழும் தலைவர்களாக மாறவே திட்டங்களை வகுத்துள்ளனர்.

இதனால், மிக மோசமான, ஜனநாயக விரோத சர்வாதிகார வெறியை உடனடியாக நிறுத்துமாறு நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்ஷ அரசுக்கும் கூறுகின்றோம்.

ரணில் தரப்பினர் இன்று இதனைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். எதிர்காலத்தில் கொழும்புக்கு வரப்போகும் இலட்சக்கணக்கானவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது.

85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவோம்.

இதனால், மக்களுக்கு அஞ்சி ஒளியும் இடங்களைத் தேடிக்கொள்ளுமாறு ரணிலுக்கும் தாக்குதல் நடத்துபவர்களுக்கும் நாங்கள் கூறுகின்றோம்" - என்றார். (ஐ)

# இலங்கை - சீனா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் விரைவுபடுத்தப்படும்!

கொழும்பு, செப். 26

இலங்கை - சீனா சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை துரிதப்படுத்த இரண்டு நாடுகளும் இணங்கியுள்ளன என்று சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்புக்கான நம்பிக்கையை அதிகரிக்கவும், ஸ்திரப்படுத்துவதற்கும் இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீன வெளிவிகார அமைச்சர் வோங் யியை நியூயோர்க்கில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது இது குறித்து கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான சீன தூதரகம் தனது டுவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

சீனாவும் இலங்கையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஆதரவையும் தொடர்ந்தும் வழங்கும். அத்துடன், இறையாண்மை மற்றும் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களில் சீனா இலங்கையுடன் இணைந்து நிற்கும் எனவும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.